
புதிய உதயம்

3/2014
இலவச வெளியீடு
PUTHIYA UTHAYAM
www.penerangan.gov.my

மலேசியா : ஓர் இலக்கு, ஓர் அடையாளம்



2015 வரவு செலவுத் திட்டம்

மலேசிய கூட்டமைப்பில் முன்னேறிய சபா மற்றும் சரவாக்



மலேசியாவில் பொருள் சேவை வரி பிற்போக்குத்தனமானதா?

ISSN 2180-3005

KKMM
KEMENTERIAN KOMUNIKASI
DAN MULTIMEDIA MALAYSIA

JABATAN
PENERANGAN
MALAYSIA

தேசிய கொள்கை வெளியீட்டுப் பிரிவு
மலேசிய தகவல் துறை

அரசாங்கத்தின் தரமான வெளியீடு

"உங்கள் அறிவை எங்களோடு பெருக்கிக்கொள்ளுங்கள்"





புதிய உதயத்தின் அன்பு இதயங்களே...

மலேசியர்களாகிய நாம் நம் நாட்டின் மீது கொண்டுள்ள பற்றுதலின் அடிப்படையில் இறைவனுக்கு மிகுந்த நன்றி தெரிவித்தவர்களாக மகிழ்ச்சியாக சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறோம். சுதந்திரம் என்பது நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைத்துள்ள மிகப் பெரிய நற்பாக்கியமாகும். மலேசியர்களுக்கு ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் 31 தேதி மிகப் பொருள் பதிந்த நாளாகும். நமது நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து 57 ஆம் ஆண்டை நாம் எட்டியிருக்கிறோம்.

'மலேசியா... ஒரு நேசம் மலர்ந்தது இங்குதான்..." என்பது 57ஆவது சுதந்திர தின கருப்பொருளாகும். இக்கருப்பொருளானது மலேசிய மக்களின் மத்தியில் உள்ள ஒற்றுமையுணர்வையும், நாட்டின் மீது கொண்டிருக்கும் பற்று மற்றும் பல்லின மக்களிடையே அன்பையும் விளக்குவனவாக உள்ளது. அதோடு, மலேசியர்கள் என்ற பொறுப்புணர்வுடன் நாம் நமது நாட்டின் சுதந்திரத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்ள ஒன்றுபட வேண்டும்.

அதிகரித்து வரும் போட்டிகள் நிறைந்த உலக சூழ்நிலையில் தனது உயர்நிலையிலான விருப்பங்களை நிறைவேற்றி கொள்ள மலேசியாவிற்கு கல்வி முறையில் உருமாற்றம் தேவைப்படுகிறது. இதற்கு ஒரு முழுமையான புதிய தூரநோக்கு தோற்றம் தேவைப்படுகிறது. 21ஆம் நூற்றாண்டில் தேவைப்படும் நிபுணத்துவத்தை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள இது வகை செய்யும். இந்த நோக்கத்திற்காக அரசாங்கம் மலேசிய கல்வி வரைவு திட்டத்தை வடிவமைத்து இருக்கிறது.

இது போன்ற பல நல்ல செயல்முறைத் திட்டங்களை நம் தலைவர்கள் இயற்றி வருகின்றனர். பலத்தரப்பட்ட மக்கள் வாழும் இந்நாட்டில் இது போன்ற பல அரிய திட்டங்கள் செயல்படுத்தப்படுவது எளிதல்ல. ஆனால், நாம் ஒன்றுபட்டால் இச்செயல் திட்டங்கள் சாதனையாக்கப்படும். ஒன்றுபடுவோமாக!

KKMM
KEMENTERIAN KOMUNIKASI DAN MULTIMEDIA MALAYSIA

1Malaysia

JABATAN PENERANGAN MALAYSIA

ஆசிரியர் குழு

காப்பாளர்
டத்தோ ஹஜி இப்ராஹிம் அப்துல் ரஹ்மான்
தலைமை இயக்குனர்
மலேசிய தகவல் துறை

ஆலோசகர்
ஹஜா அஸிஸா பிந்தி ஆவாங்
azizah@inform.gov.my
இயக்குனர்
தேசிய கொள்கை வெளியீட்டுப் பிரிவு

நிர்வாக ஆசிரியர்
கூ நூர் அஸியான் பிந்தி கூ அஸிஸான்
kuazian@inform.gov.my

ஆசிரியர்
பத்மா செல்வராஜு
pathma@inform.gov.my
neshini83@yahoo.com
019-2808526

பக்க வடிவமைப்பு
தகவல் துறையின் வடிவமைப்பு பிரிவு

புகைப்படம்
தகவல் துறையின் புகைப்படப் பிரிவு

விநியோகம்
வெளியீட்டு நிர்வாகப் பிரிவு
தேசிய கொள்கை வெளியீட்டுப் பிரிவு

(கருத்துக்களும் படைப்புகளும் வரவேற்கப்படுகின்றன)

அனுப்ப வேண்டிய முகவரி:

Ketua Pengarang
Bahagian Penerbitan Dasar Negara,
Jabatan Penerangan Malaysia,
Aras 12, Kompleks KKMM, No. 49, Persiaran Perdana,
Presint 4, Pusat Pentadbiran Kerajaan Persekutuan
62100 Putrajaya.
Tel: 03-89114995

அச்சகம்
Elpos Press Sdn. Bhd.

உள்ளடக்கம்





கண்ணோட்டம்

5 - 15 2015 வரவு செலவுத் திட்டம்

சிறப்புக் கட்டுரை

16 - 17 நாட்டின் சுபிட்சத்தை மேம்படுத்தவும் ஒற்றுமையை வலுப்படுத்தவும் வேண்டும்

நாட்டுப் பற்று

18- 19 நாட்டின் முன்னேற்றத்தை தக்க வைக்க மக்களின் ஒற்றுமை மற்றும் அரசியல் நிலைத்தன்மை அவசியமாகிறது

பார்வை

20 - 23 மலேசிய கூட்டமைப்பில் முன்னேறிய சபா மற்றும் சரவாக்

கலை கலாச்சாரம்

24 தாமிரம்

பொது

25 குழந்தைக்குத் தேவை அப்பாவின் அரவணைப்பு

சமயம்

26 இயன்ற வழியில் இறைவனை வழிப்படலாம்

27 -28 கூடிய நெஞ்சத்துக் கோயிலாக கொள்வன்

பார்வை

29 உங்களால் முடியும்

அறிவியல்

30-31 தஞ்சாவூர் பெருவுடையார் கோயில்

அலசல்

32- 35 மலேசியாவில் பொருள் சேவை வரி (GST) பிற்போக்குத்தனமானதா?

கவிதை

36 சுமையில்லா வாழ்வில் சுகமில்லை

புதிய உதயத்தின்
அன்பு
இதயங்களே...





2015 வரவு செலவுத் திட்டம்

மக்களுக்கான அத்தியாவசிய பொருளாதாரம்

1. பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துதல்
2. நிதி ஆட்சியை வலுப்படுத்துதல்
3. மனித மூலதனம் மற்றும் தொழில் முனைவர்களை மேம்படுத்துதல்
4. பூமிபுத்ரா திட்டங்களை மேம்படுத்துதல்
5. பெண்களின் பங்கை தீவிரப்படுத்துதல்
6. இளைஞர்களின் உறுமாற்றத் திட்டங்களை செயல்ப்படுத்துதல்
7. மக்களை செம்மைப்படுத்துதல்

முதல் உத்தி

பொருளாதாரத்தை ஊக்குவித்தல்

சேவைத் துறையை ஊக்குவித்தல்

1) 2013 KDNK இலக்கு பங்களிப்பு 55 விழுகாட்டை 2020 ஆண்டு 60 விழுகாடு உயர்த்துதல்

- சேவைத் துறையின் செயல்திட்டத்தை நிறைவேற்றுதல்

2) மனித மூலதனத்தை உச்சமாகக் கொண்ட சேவை துறையை, புத்தாக்கம், உற்பத்தி மற்றும் அதிக வருவாய் போன்ற அடிப்படைக் கொண்ட சேவை துறையாக்குதல்

- பொதுப்பணி துறையின் உத்திரவாத திட்டத்தை (SJSP) உருவாக்குதல் - RM5 மில்லியன்
- 5 மில்லியன் வரை நிதி உதவி மற்றும் 70 விழுக்காடு அரசாங்க உத்திரவாதத்துடன் - 4000 PKS நிறுவனங்கள் பயன் அடையும்

3) நிறுவனங்களுக்கு ஆராய்ச்சி ஊக்குவிப்பு திட்டம் (Research Incentive Scheme for Enterprise (RISE) RM10 மில்லியன்

- தனியார் துறைகள், தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொடர்பு பிரிவுகளில் ஆராய்ச்சி மையங்களை நிறுவ ஊக்குவித்தல்
- 1000 வேலை வாய்ப்புக்கள் இத்திட்டத்தினால் உருவாகும் நன்மைகள்

4) ஏற்றுமதி சேவை நிதியை மீண்டும் அறிமுகப்படுத்துதல் - RM300 மில்லியன்

- சிறு மற்றும் நடுத்தர தொழில் செய்வோர் சந்தைகளை ஆராய்தல் மற்றும் புதிய சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்தல் போன்றவற்றை ஊக்குவித்தல்.

இஸ்லாமிய நிதி சந்தையை ஊக்குவித்தல்


5) முதலீட்டு கணக்கு களத்தை அறிமுகப்படுத்துதல் -RM150 மில்லியன்

- சிறு மற்றும் நடுத்தர தொழில் முன்னேற்றம் மற்றும் வணிகர்களின் செயல்திட்டத்திற்கு நிதி உதவியாக 'syariah'-வை பின்பற்றும் முதலீட்டு கணக்கு
- 'High Net North Individuals' எனும் ஏற்புடைய முதலீட்டில் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு வருமான வரி விலக்கு.

6) மலேசிய அரசாங்க பாதுகாப்பு மற்றும் அரசாங்க முதலீட்டு நடவடிக்கைகளைப் பட்டியலிட்டு பராமரிக்க பரிந்துரைத்தல்

7) 'Susuk Ijarah'யை வெளியிட செலவுகளுக்கு வரி விலக்கு 2018ம் ஆண்டு வரைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

முன்னேற்றமடைந்த நாடு
2020ம் ஆண்டில் அதிக வருவாய்



MALAYSIA NATIONAL DEVELOPMENT STRATEGY (MYNDS)

மலேசிய தேசிய வளர்ச்சி திட்டம்

- பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்கள் செலுமையை சமநிலைப்படுத்துதல்
- RMK 11 ஆம் கீழ் திட்டங்களின் அடிப்படையை திட்டமிடல்

I. அதிக தாக்கத்தைக் கொண்ட திட்டம்
II. விலைக் குறைவானது
III. திறமையான மற்றும் வேகமாக செயல்ப்படுத்துதல்
IV. ஒத்துழைப்பு நிலையானது

பொருளாதார செயல்த்திறன்

- 2014 KDNK: 5.5% - 6.0% ; 2015 KDNK : 5.0%- 6.0%
- 2014ம் ஆண்டின் நிதி பற்றாக்குறை : 3.5%
  2015ம் ஆண்டு 3.0%
- மத்திய அரசாங்கத்தின் வருவாய் 2014 : RM225,094 மில்லியன்
- மத்திய அரசாங்கத்தின் வருவாய் 2015 : RM235,219 மில்லியன்

2015 வரவு செலவுத் திட்ட செலவினங்கள்

I. செயல்முறைச் செலவினங்கள்: RM273.9 பில்லியன்
II. மேம்பாட்டுச் செலவினங்கள்: RM48.5 பில்லியன்
III. எதிர்பாராத சம்பவங்களுக்கான சேமிப்பு : RM2 பில்லியன்

உள்நாட்டில் கப்பல் துறையை ஊக்குவித்தல்

8) 'Exim' வங்கி வழி, 'Protection & Indemnity (P&I) பாதுகாப்பு மற்றும் ஈட்டுறுதி கடிதத்தை நிறுவுதல்

- 300 டன் மற்றும் குறைவாக மொத்த சுமையை கப்பல்களின் மலேசிய உரிமையாளர்கள் மூன்றாம் காப்புறுதி கடப்பாட்டை நியாயமாக தொகையை பாதுகாத்தல்.

தொழில்துறைக்கான நிர்வாக ஊக்குவிப்புத் தொகை

9) தொழில்துறை நிர்வாகத்தை ஊக்குவித்தல்

- குறைந்த வளர்ச்சியடைந்த பகுதியை பராமரித்து மேம்படுத்தும் தனியார் தரப்பினர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு 100 விழுக்காடு வருவாய் விலக்கு
- பிற இடங்களில் நிர்வாகிக்கும் தனியார் தரப்பினருக்கு 5 ஆண்டுகளுக்கு 70 விழுக்காடு வருவாய் விலக்கு

தொழிலாளர்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை மூலதன சலுகை வழி தானியக்க செயல்முறையை அதிகரித்தல்

10) தானியக்க செயல்முறை வழி வெளிநாட்டு தொழிலாளர்களை சார்ந்திருக்கும் தொழில்களை குறைத்து உற்பத்தி திறனை மேம்படுத்துதல்.

	தொழில் பிரிவு	தானியங்க செலவுகளுக்கு மூலதன ஊக்கத்தொகை	ஊக்கத் தொகை காலகட்டம்
I	தொழிலாளர்களை அதிகப்படி சார்ந்திருக்கும் தொழில் துறைகள் (ரப்பர், வார்ப்பப்பொருள், மரக்கட்டை, மரச்சாமான்கள் மற்றும் நெசவு துறைகள்)	முதல் 200 விழுக்காடு அதிகமான செலவுகளுக்கு RM4 மில்லியன்	2015 முதல் 2017 வரை
II	பிற தொழில்துறை	200 விழுக்காடு அதிகமாயின் RM2 மில்லியன் முதல் மூலதன செலவுகள்	2015 முதல் 2020 வரை

பொது மற்றும் தனியார் முதலீட்டை தீவிரப்படுத்துதல்

11) சில உள்கட்டமைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படும்

- சுங்கை பெசி - உலு கிள்ளான் வரையிலான (SUKE) (59km) நெடுஞ்சாலையை RM5.3 பில்லியன் செலவில் அமைத்தல்.
- தைப்பிங் - பந்திங் (276 KM) நெடுஞ்சாலை RM4.2 பில்லியன் செலவில் அமைத்தல்.
- டாமான்சாரா - ஷா ஆலாம் (DASH) (47km) RM4.2 பில்லியன் செலவில் அடைதல்.
- கோலாலம்பூர் சுற்று வட்டாரம் - கிழக்கு தொடர்பு வழி (EKVE) (36km) RM1.6 பில்லியன் செலவில் அமைத்தல்.
- கிழக்கு கடற்கரை பகுதியின் இரயில் கட்டுமான துறையை RM150 மில்லியன் செலவில் மேம்படுத்துதல் .
  - Gemas – Mentakap
  - Jerantut - Sungai Yu
  - Gua Musang – Tumpat
- RM23 பில்லியன் செலவில் செலாயாங் - புத்ராஜெயா (56 KM) MRT சேவை.
- முக்கிய பெருநகரமான ஷா ஆலாம் - கிள்ளான் இணைக்கும் LRT 3 வளர்ச்சி திட்டம் RM9 பில்லியன் செலவில் அமைக்கப்படும்.
- Pengerang Integrated Petroleum Complex (PIPC) RM69 பில்லியன் முதலீட்டில் அமைத்தல்.
  - எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் 10,000 அதிகமான தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்.
- 'Suitainable Mobility Fund' எனும் RM70 மில்லியன் கடன் வழங்கும் நிதி வழி மலேசியாவில் மின்சார வாகன உற்பத்தி துறையை மேம்படுத்துதல்.
  - சன்வே, மலாக்கா மற்றும் கோலாலம்பூர் போன்ற பெருநகரங்களில் போக்குவரத்து அமைப்பின் கீழ் 50 மின்சார பேருந்துகள் அறிமுகப்படுத்துதல்.

படைபாக்க தொழில்துறையைத் தீவிரப்படுத்துதல்

12) RM100 கோடி செலவில் தகவல் தொடர்பு மற்றும் பல்லூடக நிறுவனத்தின் கீழ் டிஜிட்டல் உள்ளடக்க தொழில்துறை நிதியை உருவாக்குதல். இது இயக்கவூட்டல், பட தயாரிப்பு, உயிரூட்ட சித்திர துறை, கலாச்சார, பராம்பரிய துறையை மேம்படுத்துதல்.

அதிவேக அகன்ற அலைவரிசை ஆற்றலை மேம்படுத்துதல்

13) RM2.7 மில்லியன் செலவில் 3 ஆண்டுகளுக்குள் 1000 தொலைத்தொடர்பு அலைப்பரப்பி கோபுரங்கள் மற்றும் கடல் மட்ட கம்பி வட்டங்கள் கட்டுதல்

சுற்றுலா துறையை தீவிரப்படுத்துதல்

14) 2015-ஆம் ஆண்டுக்கான மலேசிய விழாக்கள் - MyFest 2015

- 29.4 கோடி வெளிநாட்டு சுற்றுப்பயணிகளை இலக்கக கொண்டு RM89 கோடி வருமானம் எதிர்பார்ப்பு

சிறு மற்றும் நடுத்தர வியாபாரத்தை மேம்படுத்துதல்

15) SME Investment Partner (SIP) திட்டம் - 5 வருடங்களுக்கு RM375

- ஆரம்ப மற்றும் வளரும் கட்டத்தில் இருக்கும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஊக்குவிப்பு தொகையின் மூலம் நிதி வழங்குதல்

16) சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு PKS-ன் மூலம் பயிற்சி மற்றும் ஆலோசனை வழங்க Business Accelerator Programme RM10 கோடி செலவில் (SME Corp).

17) RM50 கோடி செலவில் Malaysian Industrial Development Finance நிறுவனத்தின் வழி தானியக்கம் மற்றும் நவீனமயமாக்கம் எனும் எளிமையான கடன் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.

18) TEKUN ஊக்குவிக்கும் வியாபாரங்களுக்கு RM500 கோடி நிதி அதிகரிப்பு

எண்	திட்டம்	ஒதுக்கீடு	நன்மைகள்
I	பூமிபுத்ரா வியாபாரிகள்	350 மில்லியன்	33,000 புதிய கடன் பெற்றவர்கள்
II	இந்திய வணிகர் ஊக்குவிப்பு திட்டம்	50 மில்லியன்	5,000 புதிய கடன் பெற்றவர்கள்
III	இளைய பெண் வணிகர்களை முன்னேற்றும் திட்டம்	50 மில்லியன்	5,000 கடன் பெற்ற பெண்கள்
IV	முன்னால் இராணுவ வணிகர்கள் முன்னேற்ற திட்டம்	50 மில்லியன்	5,000 ஒய்வு பெறாத இராணுவ வீரர்கள்

19) சிறு மற்றும் நடுத்தர வணிகர்களுக்கு ஊக்குவிப்பு

- சிறு மற்றும் நடுத்தர வணிகர்களுக்கு சுலபமான கடனுதவி - RM 50 மில்லியன்
- சிறு வியாபாரி மற்றும் அங்காடிக்காரர்களுக்கு சிறு கடனுதவி (MIKRO)- RM30 மில்லியன்

புதிய கண்டுப்பிடிப்பு மற்றும் வர்த்தகத்துறை

20) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துதல்

- 360 உயர் தர புதிய கண்டுப்பிடிப்புகளை வர்த்தகமாக்குதல் - 5 வருடத்தில்
- R&D&C ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான நிதி - RM290 மில்லியன்
- SME Technology செயல்படுத்த SIRIM முத்திரை மாற்றப்படும்
- Penetration, Upgrading Program and Technology Auditing
- Public Private Research Network - RM50 மில்லியன் செலவில் அறிமுகப்படுத்தப்படுகிறது
- Technology Commercialization Platform திட்டத்திற்கு RM50 மில்லியன்

இரண்டாவது உத்தி

நிதி ஆற்றலை வலுப்படுத்துதல்

பொருள் சேவை வரி (GST)

21) GST விதிக்கப்படாத பொருள் மற்றும் சேவைகளை விரிவுப்படுத்துதல்

- ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து உள்ளூர் பழங்கள்
- வெள்ளை மற்றும் wholemeal ரொட்டி
- காப்பி, டீ மற்றும் கொக்கோ தூள்கள்
- மஞ்சள் மீ, குவே தியாவ், லக்சா மற்றும் சிறிய மீ
- 320 இராசயன உட்பொருளை கொண்ட 2,900 வகையான நாட்டின் முக்கிய மருந்து வகைகளில் தர அடையாளங்கள்.

- இம்மருந்துகள் நெஞ்சு வலி, சக்கரை நோய், இரத்த அழுத்தம் புற்று நோய் மற்றும் கருவுற்று சிகிச்சை போன்ற 30 வகையான பொது சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படும் மருந்துகள்.

- சிறுவர் வண்ணம் தீட்டும் புத்தகம், பயிற்சி புத்தகம், மேற்கோள் புத்தகம், பள்ளி புத்தகம், அகராதி மற்றும் சமய நூல்கள் போன்ற வாசிப்பு பொருட்கள்.

- நாளிதழ்

22) மின்சார பயன்பாடு முதல் 200 லிருந்து இப்பொழுது 300க்கு உயர்த்தப்படுகிறது.

23) RON 95 பெட்ரோல், டீசல் மற்றும் LPG போன்ற சில்லரை விற்பனைகளுக்கு GST வரி விலக்கு

24) 2015 ஆம் ஆண்டு மதிப்பீட்டின் வழி தனிநபர் வருமான வரியை மறுசீரமைப்பு செய்தல்

- 1 லிருந்து 3 விழுக்காடு தனிநபர் வருமான வரி குறைப்பு

- 1000,000 ரிங்கிட்டிலிருந்து 400,000 ரிங்கிட் வருமான வரி என்ற அதிகபட்ச விகிதத்தல் வருமான வரி அதிகரிப்பு

25) நிறுவனம், கழகம் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனம் மற்றும் கூட்டுறவு வரி விகிதம்

- 2015 ஆம் ஆண்டு மதிப்பீட்டில் கூட்டுறவு வருமான வரியை 1லிருந்து 2 புள்ளி விழுக்காடு குறைத்தல்

- 2016ஆம் ஆண்டு மதிப்பீட்டில் நிறுவனங்கள் வருமான வரியை 25 விழுக்காட்டிலிருந்து 24 விழுக்காடு குறைத்தல்

- 2016ஆம் ஆண்டு சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வருமான வரி 20 லிருந்து 19க்கு குறைக்கப்படும்.

26) GST செயல்படுத்துவதன் வழி, வியாபாரிகளுக்கு உதவி மற்றும் ஊக்கத்தொகை

- GST பற்றிய பயிற்சிகளுக்கு தங்கள் தொழிலாளர்களை அனுப்பும் வியாபாரிகளுக்கு RM100 மில்லியன் பயிற்சி மானியங்கள்

- கணக்கியல் மென்பொருள்களை வாங்க சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கு RM150 மில்லியன் கடனுதவி. அந்த பற்றுச்சீட்டை, சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகள் SME Corp இங்குப் பெற்றுக் கொள்ளலாம்.

- ICT பொருட்கள் மற்றும் மென்பொருட்கள் வாங்கும் மூலதன ஊக்குவிப்புத் தொகை விரைவுப்படுத்தப்படும்.

- GST மற்றும் ICT குறித்த கணக்கியல் பயிற்சி செலவுகளுக்கு மேலும் வரி குறைப்பு.

சீரமைக்கப்பட்ட உதவித்தொகைகள்/மானியங்கள்

27) மானியங்களை சீரமைக்கும் முயற்சிகள் கட்டங் கட்டமாக அமல்ப்படுத்தப்படும்.

- அரசாங்கம் இடைக்காலகட்டத்தில் பெட்ரோலுக்குத் தரப்படும் மானியத்திற்கு புதிய நுட்பத்தை மேம்படுத்தவுள்ளது.

தேசிய நீலக்கடல் உத்தி (NBOS)

28) RM356 மில்லியன் நிதி, அவை:

- திரங்கானு, கிளந்தான், நெகிரி செம்பிலான் மற்றும் பெர்லிஸில் மேலும் 4 UTC மற்றும் கெடாவில் ஒரு சிறிய UTC திறிக்கப்படும்.

- 5000 பயிற்றுணர்களுக்குதிறன் மேம்படுத்தும் 'upsklling' பயிற்சிகளை தீவிரப்படுத்தும்.

மூன்றாவது உத்தி

மனிதமூலத்தனம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு



பள்ளி செயல்த்திறன் மற்றும் ஆசிரியர் தொழில் நேர்த்திகளை உறுதிப்படுத்துதல்

29) RM250 மில்லியன் - பள்ளி முன்னேற்ற ஆலோசக நிபுணர் மற்றும் பள்ளி முன்னேற்ற நண்பர் திட்டங்கள்

- குறைவான செயல்திறன் பள்ளியில் தலைமையாசிரியர், ஆசியர்களுக்கு ஆசிரியப்பணி திறன், தலையீடு திட்டம் தீட்டுதல், மறுசீரமைப்பு திட்டம் மற்றும் பள்ளி பராமரிப்பு மற்றும் தலைமைத்துவம் போன்றவற்றின் வழிகாட்டல்.

- அரங்காவலர் பள்ளி மற்றும் புதிய பள்ளிகளை நிர்மானித்தல்

30) அரங்காவலர் பள்ளி திட்டம்

- 20 பள்ளிகளுக்கு மேல் விரிவாக்கம்
- ஜோகூர், சரவாக், சிலாங்கூர், பேராக், நெகிரி செம்பிலான் மற்றும் கோலாலம்பூர்

தொழில்நுற்ப மற்றும் தொழில்கல்விகளுக்கு முக்கியத்துவம்

31) Program Transformasi Vokasional dan Teknik (TVET) – RM1.2 பில்லியன்

- தொழில்நுட்ப மற்றும் தொழில் சார்ந்த கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கையை கூட்டுதல்

- கல்லூரிகளை மேம்படுத்தி அதன் தொழில் கல்வியின் தரத்தை அதிகரித்தல்

32) தனியார் நிறுவனங்களுக்கு வரி விதிப்பதன் மூலம் அறிவார்ந்த மற்றும் ஆற்றல் மிக்க தொழிலாளர்களை உருவாக்க முடியும்.

- வருமான வரியின் இரட்டை கழிவு

- தொழில்நுட்பம் மற்றும் தொழில்கல்வி துறையில் சான்றிதழ் முடிக்கும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை

- தொழிற்கல்வி மற்றும் Diploma நிலையில் 'intership' திட்டத்தை நிறைவேற்றும் நிறுவனங்கள்

- அங்கீகரிக்கப்பட்ட தொழில் முறை தகுதி சான்றிதழ் பெற விரும்பும் தொழிலாளர்களின் பயிற்சி செலவீனங்களை ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்களுக்கு இரட்டை கழிவு அதாவது வருமான வரியில் கணக்கீடு செய்யப்படும்.

கல்வி வசதிகளை உருவாக்கதல் மற்றும் பராமரித்தல்

33) கல்வி மற்றும் பாதுகாப்பு அம்சங்களின் வசதிகளை பராமரித்தல் (RM800 மில்லியன்)

- RM450 மில்லியன் தேசிய பள்ளிகள்
- RM50 மில்லியன் தேசிய மாதிரி சீன பள்ளிகள்
- RM50 மில்லியன் தேசிய மாதிரி தமிழ் பள்ளிகள்
- RM50 மில்லியன் முபாலிக் பள்ளிகள்
- RM50 மில்லியன் அரசாங்க உதவிபெறும் சமய பள்ளிகள்
- RM50 மில்லியன் MRSM
- RM25 மில்லியன் பதிவுபெற்ற குடில் பள்ளிகள்
- RM50 மில்லியன் தேசிய பாடத்திட்டத்தை பயன்படுத்தும் தேசிய சீன பள்ளிகள் மற்றும் 'conforming School' அதன் இணக்கப்பெற்ற பள்ளிகள்

34) மாதம் RM5000 விகிதத்தில் கல்வி அமைச்சின் கீழ் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் மின்கட்டண மற்றும் குடிநீர் கட்டணத்தை ஏற்றுக் கொள்ளுதல்.

கல்வி நிதியுதவி

35) கீழ்கண்ட நிறுவனங்களின் உயர்நிலை கல்வி பயில தகுதியான மாணவர்களுக்கு கல்வி நிதியுதவி.

- JPA - RM1.9 பில்லியன்
- மலேசிய கல்வி அமைச்சு - RM759 மில்லியன்
- சுகாதார அமைச்சு - RM258 மில்லியன்



MyBrain 15 திட்டம்

36) 2023 ஆண்டுக்குள் 60,000 முனைவர்களை (PHD) உருவாக்கும் MyBrain 15 திட்டம் தொடரப்படும்.

- 2015 ஆண்டும் கூடுதல் RM112 மில்லியன் நிதியுதவி.
- உள்நாட்டு உயர்க்கல்வி கூடங்களில் தங்களின் பகுதி நேரமாக தங்களின் பட்டப் படிப்பை தொடர விரும்பும் அரசாங்க மற்றும் அரசாங்கம் சார்ந்த ஊழியர்களுக்கு MyBrain15 திட்டத்தை வரிவுப்படுத்துதல்.

தேசிய உயர்க்கல்வி கடனுதவி (PTPTN)

37) 12 மாதங்கள் இடைவிடாமல் 31 டிசம்பர் 2015க்கும் கடனைத் திருப்பி செலுத்துபவர்களுக்கு 10 விழுக்காடு கழிவுத் தரப்படும்.

38) மார்ச் 31, 2015-க்குள் பெருந்தொகையாக உயர்க்கல்விக் கடனை திருப்பி செலுத்துபவர்களுக்கு 20 விழுக்காடு கழிவுத் தரப்படும்.

39) தேசிய கல்வி சேமிப்புத் திட்டம் (SSPN-i)

- இத்திட்டத்தில் சேர்ப்பவர்களின் குடும்ப வருமானம் வரம்பு RM4,000 ஏற்றப்பட்டுள்ளது.

பட்டதாரிகளின் வேலை வாய்ப்பும் அதிகரிக்கப்படும்

40) Industry Academia Collaboration திட்டம் - RM30 மில்லியன்.

- பல்கலைக்கழகங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் தொழில் துறையில் ஒத்துழைப்பின் மூலம் பாடத்திட்டம் மற்றும் திறன்கள் தொடர்பான பயிற்சித் திட்டங்களை மேம்படுத்ததல்.

41) பட்டதாரிகளிடையே ஆங்கிலத்தில் தகவல் பரிமாற்ற திறனையும் நம்பிக்கையையும் மேமம்படுத்தும் திட்டம்.

- அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு நுழைதல்
  - Pengajian Sastera da Sains Sosial – Band 2
  - Pengajian Sains, Teknologi, Kejuruteraan dan Matematik atau STEM - Band 3
  - Pengajian Undang-undang dan Perubatan - Band4
- பட்டம் பெற விதிமுறைகள்
  - Pengajian Sastera dan Sains Sosial - Band 3
  - Pengajian STEM – Band 4
  - Pengajian Undang-undang dan Perubatan - Band5

ஊழியர் மற்றும் குடியேறிகளின் (EKSPATRIAT)நலத்துறை

42) தொழில் சட்டம் 1955 மற்றும் தொழிலாளர் சட்டம் மதிப்பாய்வு.

- நியமனம் மற்றும் பணி இழப்பு
- வளைந்து கொடுக்கும் பணி நேரம்
- பணி ஓய்வு நன்மைகள்

43) வேலை காப்புறுதி திட்டம்.

- தற்காலிக ஊதியம் வழங்குதல் மூலம் வேலை இழப்பு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவுதல்.
- Reskilling மற்றும் upskilling பயிற்சி வாய்ப்புகள்.

44) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சார்ந்த இந்திய இளைஞர்களுக்கு தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் கல்வி உதவி - RM30 மில்லியன்.

45) டிசம்பர் 31,2020 வரை 1மலேசியா பயிற்சித் திட்டத்தை (SL1M) மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு இருமுறை வரி விலக்கு கிடைக்கப்பெறும்.

46) Globally Recognised Industry and Professional Certification அல்லது 1Malaysia GRIP - RM300 மில்லியன்.

- 30 ஆயிரம் ஊழியர்களுக்கு பயிற்சி கொடுக்க அரசு மற்றும் மனித வள மேம்பாடு நிறுவனம் இடையே மானியம் ஒப்பந்தம்.

47) வேலைச் சந்தையில் அதிக தேவை இருக்கும் 176 முழு நேர கலவிக்கு இரட்டை நேர சிறந்த கொள்திறன் முறையிலான பயிற்சிகள் மேம்படுத்தப்படும்.

- மலேசிய திறன் சார்ந்த சான்றிதழ் முடித்த மாணவர்கள்
- பல்கலைக்கழக அல்லது கல்லூரி பட்டதாரிகள்
- முறையாக தேர்ச்சி பெறாத தொழில்துறை தொழிலாளர்கள்.

48) புலம்பெயர்ந்த தொழில் முனைவோருக்கு வேலை தொடக்க அனுமதி பத்திரம் (Startup Work Pass).

- தொடக்க நிறுவனத்தின் முதலீடு RM75 ஆயிரம்.
- புலம்பெயர்ந்த தொழில் முனைவோர் தொடக்க வேலை அனுமதி பத்திரம் ஓர் ஆண்டு காலம் வழங்கப்படும்.



நான்காவது உத்தி

பூமிபுத்ரா செயல்த்திட்டம் வலுப்பெறும்

49) பூமிபுத்ரா பங்கு உரிமையை EKUINAS மூலம் அரசு சார்ந்த துணை நிறுவனங்களில் அதிகரித்தல் - RM600 மில்லியன்

50) தேசிய தொழில் முனைவர் நிறுவனம் (INSKEN) பூமிபுத்ரா தொழில் முனைவோர் சிறப்பு மையமாக வலுப்படும்.

51) சபா, சரவாக்கில் பூமிபுத்ரா தொழில் முனைவோர் தொடக்க திட்டம் விரிவாக்கப்படும்.

52) முத்திரை , சர்வதேச சான்றிமழ் மற்றும் பூமிபுத்ரா சந்தை ஆய்வு உயர் செயல்திறன் போன்றவற்றை மேம்பாடுத்த உயர்த் தர பூமிபுத்ரா நிறுவனங்கள் முன்-ஏற்றுமதி திட்டம் அறிமுகப்படுத்தபபட்டுள்ளது.

- 60 நிறுவனங்கள் இலக்கு

53) இரண்டாவது கட்ட MRT திட்டம் மற்றும் Pan Borneo நெடுஞ்சாலை திட்டம் உட்பட அரசு மற்றும் தனியார் திட்டங்களை carve-out and compete திட்டத்தின் வழி வரிவுப்படுத்துதல்

54) சிறு மற்றும் நடுத்தர பூமிபுத்ரா வியாபாரிகளுக்கு கடன் வசதிகள்

- வரையறுக்கப்பட்ட முதலீடு கணக்கு (RIA) ஷரியா உடன்படும் இஸ்லாமிய வங்கியில் RM50 ஆயிரத்திலிருந்து RM1 மில்லியன் வரை கடன் வசதிகள்

- 346 அமானா இக்தியார் மலேசியா (AIM) சகோதரர்களுக்கு RM1.8 பில்லியனில் கடனுதவி

55) பூமிபுத்ரா மனித மூலதனத்தை முன்னேற்றுதல்

- MARA-வின் மூலம் சிறந்த தகுதியான பூமிபுத்ரா மாணவர்களுக்கு கல்வி உபாகார சம்பளம் RM2 பில்லியன்

- Yayasan Peneraju Pendidikan Bumiputra மூலம் கல்வி உதவித் தொகை, பயிற்சி மற்றும் நிதியுதவி ஆகிய 3 செயல்திட்டம் - RM72 மில்லியன்

- மாரா பல்கலைக்கழகம் மற்றும் மலேசிய கணக்காளர்கள் நிறுவனம் இணைந்து தொழில்முறை கணக்கிடல் மையம் (Pusat Perakaunan Profesional) உருவாக்குதல்

சபா மற்றும் சராவாக்கின் மேம்பாடு

56) 1,663 கி.மீட்டரில் Pan Borneo நெடுங்சாலை RM27 பில்லியன் செலவில் அமையவிருக்கிறது.

- சரவாக் தொடர், 936 கி.மீ
- சபா தொடர், 727 கி.மீ

57) பட்டணம் மற்றும் நகர்புறத்தில் வாழும் மக்களின் நலனுக்காக சபா மற்றும் சரவாக்கில் ஒரு சிறிய UTC மற்றும் RTC திறக்கப்படும்.

58) சபா மற்றும் சரவாக்கில் சுகாதார திட்டம் மேம்படுத்தப்படும்

- தேனோம், சபா மற்றும் லுபோக் அன்து, சரவாக் பகுதிகளில் புதிய சுகாதார மருந்தகம்

- தாவாவ் மருத்துவமனையின் வசதிகள் மேம்படுத்தப்படும்.

- லீக்காஸ், சபாவில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் புற்றுநோய் நோயாளிகளுக்கு நுயிக்லியர் மற்றும் கதிரியக்கச் சிகிச்சை ஏற்படுத்தப்படும்.



59) கிழக்கு சபா பாதுகாப்பு மண்டல (ESSZONE) பகுதியை ஆயுத அத்துமீறல் மற்றும் எல்லை கடந்த குற்றங்களிலிருந்து பாதுகாப்பதை வலுப்படுத்துதல் - RM660 மில்லியன்

- 1,280 பாதுகாப்பு வீரர்கள் அதிகரிப்பு

  - 1 batalion PGA PDRM
  - 1 Batalion Infrantri ATM

- Esszone -ல் 2 முகாம் அமைத்தல்

  - Beluran 20 பொது இயக்கப் படை முகாம்
  - Felda Sahabat, லஹாட் டத்து இராணுவ முகாம்

60) பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் நடவடிக்கைகளை மேம்படுத்துதல்

- உயர் திறன் கொண்ட கண்காணிப்பு ராடார்

- RM230 மில்லியன் CSR PETRONAS திட்டத்தின் வழி – esszone நீர்ப்பகுதிகளில் பகுதிகளில் எண்ணெய் கிணறுகள் மற்றும் கடல் தளங்களுக்கான ஒரு துணைக் கப்பலை நிறுத்துதல்

- லாஹாட் டாத்துவின் விமான தட பாதையை நீளமாக்குதல்

- பட்டர்வெத்திலிருந்து லாபுவானுக்கு 'Skuadron Hawk' தளத்தை மாற்றுதல்

61) படிப்படையாக செம்புர்னா மற்றும் சண்டக்கான் நீர்பகுதி கிராமங்களை இடம்பெயர்த்தல்

62) சபா மற்றும் சரவாக் உணவு விநியோக சங்கிலியை, மலை நெல் மானியம் வழங்குதல் மூலம் வலுப்படுத்துதல் - RM70 மில்லியன்

63) தீபகற்பம், சபா மற்றும் சரவாக்கின் அத்தியாவசிய பொருட்களின் விலையை சமப்படுத்துதல்

- சபா, சரவாக்கில் அன்றாடம் தேவைப்படும் பொருட்களின் விலை கட்டுப்பாடு அமலாக்கத்தையும் மற்றும் அதன் போக்குவரத்து செலவுகளையும் ஏற்றல்.

- சபா, சரவாக்கில் 1மலேசியா கடைகள் அதிகரிப்பு

இடம்	ஏற்கனவே உள்ளது	அதிகரிப்பு (வரவு செலவு)	மொத்தம்
தீபகற்பம்	110	20	130
சபா	14	2	16
சரவாக்	16	3	19
மொத்தம்	140	25	165



ஐந்தாவது உத்தி

பெண்களின் பங்கை மேம்படுத்துதல்

64) பெண் இயக்குநர் திட்டத்தை உறுதிபடுத்துதல்

- முடிவெடுக்கும் குழுவில் 30 விழுக்காடு பெண்களின் பங்கை இலக்காக்குதல்
- அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் இயக்குநர் குழுவில்திறமையான மற்றும் உயர் திறன் கொண்ட வருங்கால 125 பெண்களுக்கு அப்பதவியை நிரப்ப பயிற்சியளித்தல்

65) '1Malaysia Women For Housewife'

- வேலை சந்தைக்கு முறுபடியும் செல்ல பெண்களுக்கான வாய்ப்பை மேம்படுத்துதல்

66) Women career Comeback திட்டம்

- Talent Corp வழி மீண்டும் வேலைச் சந்தைக்குச் செல்ல நிபுணத்துவ பெண்கள் அவர்கள் தொழில்துறை தகுதிக்கு ஏற்றவாறு பயிற்சியளித்தல்

67) பெண்கள் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்துதல்

- கிழக்கு, மேற்கு, மத்திய மண்டல அடிப்டையில் சிறப்பு அம்ச பாதுகாப்பு வீடுகள்
- வணிகத் துறையில் ஈடுபாடு கொண்ட தனித்து வாழும் தாய்மார்களுக்கு வாய்ப்புகள்
- 'I-KIT' மற்றும் தனித்து வாழும் தாய்மார்களின் 'Inkubator' திட்டத்தைத் தொடருதல்பெண்கள் அடிப்படை வளர்ச்சித் திட்டம்

68) AIM வழி RM30 மில்லியன் இந்திய பெண் வணிகளுக்கு தனிப்பட்ட மையத்தின் வழி பெண்களிடையே வியாபார வேகத்தை புகுத்துதல்

69) பிள்ளைகளை பராமரிக்கும் விடுமுறை வசதிகளை மேம்படுத்துதல்

- 2015ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதியிலிருந்து மகப்பேறு விடுமுறை தவணைளை கட்டுப்பாடு தளர்த்தப்படும்.
- 1 வருட கால கட்டுப்பாட்டுக்கு உட்படும்.
- மாற்றாந்தாய் பிள்ளை, சட்டமுறையான வளர்ப்பு பிள்ளை மற்றும் மாற்றுத்திறனாளி பிள்ளைகள் உள்ள பெண் அதிகாரிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

70) தனியார் அலுவலகங்களில் குழந்தைகள் பராமரிப்பு மையங்களை அதிகப்படுத்துதல்.

- நடப்பில் உள்ள வழிமுறைகளில் திருத்தங்கள்
- நிபந்தனைகளுக்கு உட்பட்டு முதலாளிகள் குழந்தைகள் பராமரிப்பு மையங்களை இரண்டாம் மாடிகளுக்கு மேலே அமைக்க அனுமதிக்கப்படும்.

ஆறாவது உத்தி

நாட்டின் இளைஞர்களின் மறுத்தோற்றத் திட்டத்தை உருவாக்குதல்

71) நாட்டின் இளைஞர்களின் மறுத்தோற்றத் திட்டத்தை தொடங்குதல் - RM320 மில்லியன்

72) நாட்டின் தேசிய சேவை பயிற்சியை (PLKN) மறுஆய்வு செய்வதோடு, திறன் மற்றும் நாடு சம்பந்தப்பட்ட விடயங்களை இணைக்கும் ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்துதல்

73) மலேசிய இனங்களுக்கிடையே தலைமைத்துவ திறமையை தீவிரப்படுத்த 'Akademi Kepimpinan Belia' எனும் திட்டத்தை அறமுகப்படுத்தும்

74) 1M4U மூலம் இளைஞர்களிடையே தன்னார்வ திட்டத்தை தீவிரப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் MyCorp திட்டத்தையும் அறிமுகப்படுத்துதல் - RM10 மில்லியன்

75) ராக்கான் மூடா திட்டத்தை மேம்படுத்துவதோடு நின்றுவிடாமல் ஒற்றுமை முகாம் (KEM Uniti) திட்டத்தை அறிமுகப்படுத்துதல்

76) MAGIC, SME மற்றும் Agro வங்கி திட்த்தின் வழி இனங்களுக்கிடையே வணிக திறனை பிரகாசிக்கச் செய்தல் - 'Online Resource Centre' இணைய வள மையம் அறிமுகப்படுத்துதல் மற்றும் அனைத்துலகிலான சமூக தொழில் முனைவோர் மாநாட்டை ஏற்பாடு செய்தல்

77) இளம் வேளான் தொழிலதிபர் (Agropreneur) எனும் திட்டத்தை நிறைவேற்றுதல்

- மாதம் RM5000 திற்கும் அதிகமான வருமான இலக்கு

78) 'Program Transformasi IKBN', 'Program Coding Bootcamp' மற்றும் Program Projek Angkat dan Upaya (PADU) ஆகிய திட்டங்களின் வழி இளைஞர்களின் ஆதரவையும் திறமையையும் மேம்படுத்துதல்

79) 1மலேசியா இளைஞர் நகரம் - RM100 மில்லியன்

- வேலை, வியாபாரம், வணிகம், விளையாட்டு வசதி மற்றும் வீடு போன்ற வாயப்புகளை வழங்கும்
- 3 ஆரம்ப திட்டங்கள்
  - தீபகற்பம்
  - சபா
  - சரவாக்

80) அரசாங்கம், தேசிய வங்கி, ஊழியர் சேமநிதி வாரியம் மற்றும் Cagamas ஆகிய அறிவார்ந்த கூட்டுறவின் வழி இளையோர் வீடமைப்பு திட்டம் (Youth Housing Scheme) என்ற முதல் வீடு வாங்குவதற்கான கடனுதவியை எளிமையாக்கப்படுகிறது.

- தகுதிகள்:

- RM500 ஆயிரத்திற்கும் மேற்போகாத முதல் வீட்டிற்கான கடனுதவி
- 25 முதல் 40 வயதுக்குட்பட்டதிறமையான இளைஞர்கள் RM10 ஆயிரத்திற்கும் குறைவான மாத குடும்ப வருமானம்
- 35 ஆண்டுகள் கடன் தவணை

- கடனுதவியின் பயன்கள்

- வீட்டின் மாத கடன் சுமையைக் குறைக்க முதல் இரண்டு ஆண்டுகளுக்கு அரசாங்கம் RM200 வழங்குகிறது.
- பெயர் மாற்று கடிதம் மற்றும் கடன் ஒப்பந்தங்களுக்கு 50 விழுக்காடு முத்திரை வரி விலக்கு
- காப்புறுதி உட்பட கடனுதவி பெறும் நபர்களுக்கு 10 விழுக்காடு கடன் உத்தரவாதம் வழங்கப்படும்.

81) தேசிய விளையாட்டு Blueproint செயல்படுத்துதல் - RM103 மில்லியன்

82) ஆண்டுதோறும் நவம்பர் முதல் சனிக்கிழமைகளில் தேசிய விளையாட்டு நாள் கொண்டாடுதல்

ஏழாவது உத்தி

வளமான மக்கள் வாழ்க்கை

83) ஆரம்ப மற்றும் அடைநிலைப்பள்ளி மாணவர்களுக்கு RM100 உதவித்தொகை - 5.4 மில்லியன் மாணவர்கள் பயனடைவர்

84) RM250 உதவித் தொகை கொண்ட 1மலேசியா புத்தக பற்றுச்சீட்டு (BB1M) - 1.3 மில்லியன் மாணவர்கள் பயனடைவர்

உணவு சங்கிலியை வலுப்படுத்துதல்

85) 2015 ஆண்டு தொடங்கி 2017 ஆண்டு வரை தேர்வுசெய்யப்பட்ட இடங்களில் ஒவ்வொரு நாளும் சுமார் 65 நிரந்தர விவசாய சந்தைகள் மற்றும் 50 மீன் சந்தைகள் திறக்கப்படும்.

86) நாடெங்கும் தேர்வு செய்யப்பட்ட 85 இடங்களில் ஒவ்வொரு வாரமும் நியாய விலையில் தரமான காய்கறிகள் ஏளம் திட்டம் FAMA -வின் பரிவர்த்தனை செயல்பாடு மையம் மற்றும் விவசாய சந்தையில் நடைபெறும்.

87) தோட்டப்புறங்களின் உற்பத்தி மற்றும் அதனை சந்தைப்படுத்துவதை அதிகரிக்க " Lembaga Pertubuhan Peladang"-க்கு RM100 மில்லியன் இணை மானியம் வழங்கப்படும்.

88) Rompin, Batang Lupar, Kota Belud மற்றும் Pekan போன்ற பகுதிகளுக்கு RM100 மில்லியன் செலவில் சுமார் 25,905 ஏக்கர் நெல் பயிரிடப்படும் 4 ஒருங்கினைந்த விவசாய வளர்ச்சி இடங்களை மேம்படுத்துதல்.



மீனவர் வளர்ச்சியும் நலனும்

89) மீனவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல்

- A மண்டலம் - மாதம் RM200 லிருந்து RM300
- B மண்டலம் - மாதம் RM200 லிருந்து RM250
- C மண்டலம் - மாதம் RM200 லிருந்து RM250

90) RM313 மில்லியன் - முழு நேரமாக வேலை செய்யும் 44,000 மீனவர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு RM200 ஊக்குவிப்பு தொகை

91) RM60 மில்லியன் - குளங்களில் வளர்க்கப்படும் மீன், 'kupang' சிற்பிகள் போன்ற நீரியல் வளங்களின் உற்பத்தியை பெருக்குவதால் மீனவர்களின் வருமானம் வளப்படுத்தப்படுறது.

92) RM27 மில்லியன் - மீனவர்களின் மீன் உற்பத்தியை அதிகரிக்க அவர்களின் படகுகளின் 'Automatic IdentificationSystem" பொருத்தப்படும். அது கடலில் மீனவர்களின் இடத்தை மீன் பிடிக்கும் மண்டலத்தின் வழி அறியவும் மற்றும் இயக்க செலவுகளையும் குறைக்கிறது.

93) RM250 மில்லியன் - மீனவர்களின் வீடுகளை மறுசீரமைக்கவும் மற்றும் புதிய வீடு கட்டும் திட்டமும் 'மீனவர் சிறப்பு திட்டங்கள்' வழி நிறைவேற்றப்படும்.

விலை தரப்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு

94) நுகர்வோர் அமைப்பின் வழி ' Price Watch Team' அல்லது விலை கண்காணிப்பு குழு உருவாக்கம் மற்றும் ஒதுக்கீடு.

95) விலை கண்காணிப்பு நுட்பத்தை வலுப்படுத்துதல்

- GST அமலாக்க பிரிவு : 2,270 உறுப்பினர்
- விலை கண்காணிப்பு பிரிவு : 1,300 உறுப்பினர்
- பயணீட்டாளர் அணி : 202,800 உறுப்பினர்
- கிராமப்புற தலைவர்கள் : 579 ஆட்கள்

பொது போக்குவரத்து சேவை

96) புறநகரங்களில் தங்கி கோலாலம்பூரில் வேலை செய்யும் மக்களுக்கு நகரங்களுக்கிடையிலான பேருந்து சேவை செய்து கொடுக்கப்படும்.

- 30 விழுக்காடு கழிவுடனான மாதாந்திர கட்டணம்
- துவக்கத்தில் 3 வழிகள்
  - ரவாங் - கோலாலம்பூர்
  - கிள்ளான் - கோலாலம்பூர்
  - சிரம்பான் - கோலாலம்பூர்

97) ஈப்போ - பட்டர்வர்த் இடையிலான 'மின்சார இரயில் சேவை' (ETS) ஏப்ரல் 2015 தொடக்கம்.

98) தற்பொழுது சேவையில் உள்ள பேருந்து நிலையங்களின் பேருந்து சேவை ஒப்பந்த முறையை கட்டம் கட்டமாக மேம்படுத்துதல்.

- கூச்சிங் பட்டணம்
- ஈப்போ
- சிரம்பான்
- குவாலா திரங்காணு
- கங்கார்

மின்சார இரயில் சேவை (ETS) ஏப்ரல் 2015 தொடக்கம்.



ரப்பர் மற்றும் செம்பனை விவசாயிகளுக்கு உதவி

99) சிறு ரப்பர் தோட்ட விவசாயிகளுக்கான உதவி

- Lembaga Getah Malaysia -க்கு RM100 மில்லியன் ஒதுக்கீடு - உலக பொருளாதார சந்தையில் ரப்பர் விலை குறைந்தபட்ச விலையை விட குறையும் போது சிறு ரப்பர் தோட்ட உரிமையாளர்கள் நஷ்டமடைவதில் இருந்து பாதுகாக்கும் விலை கட்டுப்பாடு நுட்பம்

- RM6.4 மில்லியன் - சிறு ரப்பர் தோட்ட உரிமையாளர்களிடமிருந்து நேரடியாக ரப்பர் வாங்கும் 64 சிறு தோட்ட கூட்டுறவிற்கு எளிதான கடனுதவி கொடுக்கப்படும்.

100) சிறு செம்பனை தோட்ட உரிமையாளர்களுக்கான உதவி

- RM41 மில்லியன் - புதிய மற்றும் மறுபயிரிடு ஊக்கத் தொகை

- CPO எனப்படும் கச்சா எண்ணெய் ஏற்றுமதியின் வரி விலக்கு டிசம்பர் 2014-ஆம் ஆண்டு வரை நீடிப்பு



மக்களுக்கான சுகாதார சேவையை மேம்படுத்ததல்

101) 2 மருத்துவமனைகள் கட்டப்படும்

- டுங்கூன், திரங்காணு மருத்துவமனை
- ஸ்ரீ இஸ்கண்டார், பேராக் மருத்துவமனை

102) 20 சுகாதார மையங்கள்

103) சைபர்ஜெயாவில் ஒரு சுகாதார மையம் கட்டுவதோடு மட்டுமல்லாமல் மேலும் 30 1மலேசிய சுகாதார மையம் கூட்டப்பட்டு அதில் 30 மருத்துவர்கள் அமர்த்தப்படுவர்.

104) இரத்த ஊடு (Hemodalisis) சேவையை மேம்படுத்துதல்

- RM30 மில்லியன் செலவில் அரசு மருத்துவமனை மற்றும் சுகாதார மையங்களிலுள்ள 635 இரத்த ஊடு இயந்திரங்களை புதிதாக மாற்றுதல்

- தனியார் நிறுவனம் நன்கொடையாக வழங்கவிருக்கும் 244 இரத்த ஊடு இயந்திரங்களை அரசு மரத்தவமனை மற்றும் சுகாதார மையங்களில் அமைப்பதற்கான இடத்தை ஒதுக்குதல்

- RM45.4 மில்லியன் செலவில் இரத்த ஊட்டிற்கான சிகிச்சை மேற்கொள்ளும் நேயாளிகளுக்கு மருந்துகள் தயார் செய்தல்

105) தொற்று நோய், சிறுநீரக செயழிழப்பு மற்றும் மாரடைப்பு போன்ற தீவிர நோய்களுக்கான சிகிச்சை செலவுகளுக்கு வருடம் RM6000 வரையில் வரி விலக்கு

- இந்த வரி விலக்கு கணவன் மனைவி மற்றும் பிள்ளைகளுக்காக உட்பட்டது.

106) 'Reagen, Ultra Low Volume மற்றும் Mist Blower எனும் டெங்கி காய்ச்சலை தடுக்கும் கருவிகள் பெருதல் மற்றும் டெங்கியை தடுக்கும் சமுதாய விழிப்புணர்வு திட்டங்களை அதிகரித்தல்

107) ஆரம்பக் கால டெங்கியை கண்டறியும் செயல்முறையை திவிரப்படுத்த ஒவ்வொரு தனியார் சுகாதார மையங்களுக்கும் சுமார் 55,000 'test-kid'-டை பகிர்ந்தளித்தல்

சமூக நலம்

108) RM1.2 பில்லியன் - ஏழைக் குடும்பத்தினர், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு கடனுதவி

109) மாற்றுத்திறனாளிகளுக்கான (OKU)உதவித்தொகை:

- வேலை செய்யும் மாற்றுத்திறனாளிகளுக்கு - RM300 லிருந்து - RM350 வரை

- வேலையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு – RM150 லிருந்து - RM200 வரை

110) ஒவ்வொரு மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு RM5000 முதல் RM6000 வரை வரி விலக்கு

111) மாற்றுத்திறனாளிகள், அவர்களின் துணை, குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின் உதவி உபகரணங்கள் வாங்குவதற்கு RM5000 முதல் RM6000 வரை வரி விலக்கு

112) 63 அரசு சமூக நல இல்லங்களில் வசிக்கும் 8,700 பேர்களுக்கு சாப்பாட்டு செலவு நாள் ஒன்றுக்கு RM8 லிருந்து RM16 வரை அதிகரிக்கப்படும்.

113) மாற்றுத்திறனாளிகளின் (OKU) தேசிய நிகழ்வுகளுக்கு வருடாந்திர மானியத்தை RM5000,000 லிருந்து RM1 மில்லியனுக்கு உயர்வு.

114) நாடு முழுவதும் உள்ள முதியோர் நடவடிக்கை மையங்களை 50 ஆக உயர்த்துவதற்கு 5 மையம் அமைக்கப் பெருவதோடு மட்டுமல்லாமல் அவர்கள் மருத்தவமனை சென்றுவர ருவை Penyayang Warga Emas மூலம் இலவச போக்குவரத்துச் சேவை.

115) RM711 மில்லியன் - கல்வி அமைச்சு, Tadika Kemas, PERMATA மற்றும் Tadika Perpaduan வழி ஆரம்பக் கல்வியை வலுப்படுத்துதல்.





சொந்த வீட்டுமனை தீர்வு

116) RM1.3 பில்லியன் - 80 ஆயிரம் PRIMA வீடுகள் கட்டப்படும்

- வீட்டின் வருமான தகுதியை RM8,000 லிருந்து RM10,000 ஆக உயர்த்துதல்
- வங்கியில் கடன் பெற முடியாதவர்களுக்கு 'rent to own' அல்லது தவணைமுறை நிதித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்

117) RM644 மில்லியன் - மாநில வீடமைப்பு துறையின் பொது வீட்டுத் திட்டத்தின் வழி 26 ஆயிரம் வீடுகள் கட்டுதல்

118) தேசிய வீட்டு நிறுவனத்தின் வழி 12 ஆயிரம் 'Rumah Mesra Rakyat' 5 ஆயிரம் 'Rumah Idaman Rakyat' மற்றும் 20 ஆயிரம் 'Rimah Aspirasi Rakyat' வீடுகள் கட்டப்படவுள்ளன.

119) கடன் ஒப்பந்தம் மற்றும் பரிமாற்ற கடிதத்தில் தொடர்ந்து 50 விழுக்காடு வரி விலக்கு மற்றும் வீடு வாங்குவதற்கான வரம்பை RM400,000 லிருந்து RM500,000 வரை வரும் 31 டிசம்பர் 2016ஆம் ஆண்டு வரை உயர்த்தப்பட்டுள்ளது.

120) 'Cagamas'-ன் "என் முதல் இல்லம்" திட்டத்தை மேம்படுத்துதல்

- வீட்டு விலை வரம்பை RM500 ஆயிரம் உயர்த்துதல்
- கடன்பெறுவோரின் வயது வரம்பு 35 வயதிலிருந்து 40 வயதுக்கு உயர்த்தப்படவுள்ளது.

121) வீட்டு பராமரிப்பு திட்டம்

- RM40 மில்லியன் - குறைந்தபட்ச வீடு
- RM100 மில்லியன் செலவில் சீரமைக்கப்படும் 1மலேசியா திட்ட தனியார் குறைந்தபட்ச வீடுகள்

122) சொத்தின் ஆதாய வரியை கணக்கிட ஏதுவாக சொத்து பரிமாற்றம் மதிப்பீட்டின் லாபத்தை தானாகவே மதிப்பிடுதல்

புறநகர்பகுதிகளில் போக்குவரத்து மற்றும் வசதிகளை மேம்படுத்துதல்

123) RM943 மில்லியன் - சபா சரவாக்கின் பழைய வெட்டுமர சாலைகள் உட்பட கிராமப்புற சாலைகள் திட்டம் (635KM)

124) RM1.1 பில்லியன் - 15,000 வீடுகளுக்கு மின்சார தொடர்பு திட்டம்

125) RM394 மில்லியன் - 7,500 வீடுகளுக்கு சுத்தமான குடிநீர் வசதி திட்டம்

126) RM200 மில்லியன் - பழுதடைந்த சுமார் 9,500 வீடுகளை மறுசீரமைப்பு செய்தல்.

127) RM160 மில்லியன் - சபா, சரவாக் ஆகாய டேபாக்குவரத்த மறுசீரமைப்பு மற்றும் தர மேம்பாடு.

128) RM352 மில்லியன் - பழங்குடி சமுதாயத்தின் வாழ்க்கைத்தரம் மற்றும் வசதிகளை உயர்த்துதல் மற்றும் பொருளாதார உயர்வு திட்டம்.

129) 56 கோடி செலவில் நாடு முழுவதும் உள்ள 22 ஆயிரம் கிராமங்களில் 10 சாலை விளக்குகளை 20 ஆக உயர்த்துதல்.

130) நாட்டில் நீண்ட கால நீர் விநியோகத்திற்கு ' National Water Blueprint'-னை தயாரித்தல்

- ஆறுகளை முழுமையாக நிர்வகித்தல்/மேலாண்மை செய்தல்
- நீர் சுத்திகரிப்பு ஆலைகளை மறுசீரமைத்தல் மற்றும் புதிதாக கட்டுதல்

131) நிலத்தடி நீர் ஆய்வு, சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை தொழில்துறையிலும் விவசாயத்திற்கும் மறு சுழற்சி மற்றும் 'Storm water retainer system' பயன்பாட்டை விரிவுபடுத்துவதன் வழி நீர் ஆதாரத்தை பன்முகப்படுத்ததல்

132) RM3 பில்லியன் - கிள்ளான் பள்ளத்தாக்கில் தண்ணீர் பற்றாக்குறை தடுப்பதற்கு Air Hangat 2 எனும் நீர் சுத்திகரிப்பு ஆலைகளை கட்டுதல்.

- சுத்திகரிக்கப்பட்ட நீர் விநியோகத்தை ஒரு நாளுக்கு 1,130 கன லட்ச லிட்டர் என உயர்த்துதல்.

133) RM122 மில்லியன் - வருவாய் அற்ற தண்ணீர் அதாவது 'Non Revenue Water' வழி நீர் இழப்பு பிரச்சனையைத் தடுத்தல்.

- நீர் கசிவுகளை கட்டுப்படுத்தவும், அதை கண்டறியும் வேலைகளயும் மற்றும் கசியும் குழாய்களை பழுதுபார்க்கும் மண்டலத்தை உருவாக்குதல்



தேசிய பாதுகாப்பு

134) தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துதல்

- மலேசிய இராணுவ படை - RM17.7 பில்லியன்
  - பாதுகாப்பு உடமைகளை வாங்குதல் மற்றும் பராமரித்தல்
  - வீடு வசதி மற்றும் சுகாதார சேவைகளின் மூலம் இராணுவ வீரர்களின் நலனை மேம்படுத்துதல்
  - அரச மலேசிய போலிஸ் படை - RM9.1 பில்லியன்
  - புதிய போலிஸ் அதிகாரிகளுக்காக சுமார் 11, 757 கூடுதல் வேலை ஒதுக்கீடு
  - 14 தலைமை காவல் நிலையம் மற்றும் காவல் நிலையங்களை கட்டுதல்
  - மோட்டார் ரோந்து பிரிவு படையை அதிகரித்தல்
  - மலேசிய கடல்சார் அமலாக்க முகாம் - RM755 மில்லியன்

135) உள்துறை அமைச்சின் கீழ் RELA-வை மலேசிய தன்னார்வ துறையாக அங்கீகரித்தல்



பொது சேவை நலன்

136) பொது சேவை துறையை மேம்படுத்துதல்

- தற்பொழுதுள்ள சேவைகளின் திறனை மேம்படுத்துதல்
- KEMAS,JASA, JPNIN, JAKIM மற்றும் SERANTA felda ஆகிய நிறுவனங்களில் 15 வருடத்திற்கு மேலும் மற்றும் ஒப்பந்த காலம் கட்டாய ஓய்வு பெற்ற அதிகாரிகள் மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் மாதம் RM300 உதவித்தொகை

137) வீட்டு கடன் தகுதி வரம்பு மறுசீரமைப்பு

- குறைந்தபட்ச தகுதி வரம்பு விகிதம் 80 ஆயிரத்திலிருந்து RM120 ஆயிரமாக அதிகரிப்பு
- அதிகபட்ச தகுதி வரம்பின் விகிதம் RM450 ஆயிரத்திலிருந்து RM600 ஆயிரமாக அதிகரிப்பு

138) 1மலேசியா அரசு ஊழியர் வீடுகள் (PERUMAHAN Penjawat Awam 1 Malaysia) PPA1M

- தற்பொழுது 850 அடி பரப்பளவு கொண்ட ஒரு PPA1M வீட்டின் குறைந்தபட்ச விலையான RM150 ஆயிரத்தை மேலும் RM90 ஆயிரமாக குறைத்தல்
- RM8,000 எனும் குடும்ப வருமான தகுதியை RM10,000 உயர்த்துதல்.
- PPA1M திட்டத்தில் பங்கு பெறும் வீட்டு மேம்பாட்டாளர்களுக்கு 25 விழுக்காடு அணுசரணை நிதி வழங்கப்படும்.

139) அரசு ஊழியர்கள் வீடுகளை பராமரிக்கும் திட்டம்

- - நாடு முழுவதிலுள்ள இராணுவ, போலிஸ், ஆசிரியர் மற்றும் சுகாதார ஊழியர்களின் அரசு வீடுகளை மறுசீரமைத்தல் மற்றும் பராமரித்தல் - RM500 மில்லியன்



பிரிம் 1மலேசியா உதவித் திட்டம்

140) பிரிம் 1மலேசியா உதவித் திட்டம்

பிரிவு	குடும்ப வருமானம்	பிரிம் தொகை	வழங்கப்படும் காலம்
குடும்பம்	RM3,000 கீழ்	RM950	RM 300 - ஜனவரி RM 300 - மே RM 300 - செப்டம்பர்
	RM 3,000 – RM4,000	RM 750	RM 200 - ஜனவரி RM 200 - மே RM 350 - செப்டம்பர்
தனிநபர்	RM 2,000 கீழ்	RM 350	RM 350 - ஜனவரி

140) i-BR1M-க்கு பதிலாக Skim Khairat Kematian

- BR1M பெறுவோரின் வாரிசுக்கு RM1000 வழங்கப்படும்.



நாட்டின் சுபிட்சத்தை மேம்படுத்தவும் ஒற்றுமையை வலுப்படுத்தவும் வேண்டும்

மலேசியா ஒரு பல்லின மக்கள் வாழும் நாடு. பல்லின மக்கள் வாழும் நாட்டில் மிக அடிப்படை விஷயமாகக் கருதுவது ஒற்றுமையையே. எனவே, ஒற்றுமை ஒவ்வொரு நாட்டின் தலைமைத்துவத்திற்கும் முன்னுரிமை கொடுத்து வித்திடுகிறது. இருப்பினும், தீங்கிழைக்கும் நோக்கத்தோடு பல தரப்பினர் எழுப்பப்படும் இனக்கலவரத்தை பாரக்கும்போது ஒற்றுமை என்பது ஒரு எளிதான காரியமல்ல. தேசிய நலன்கள் மற்றும் அதன் முக்கியத்தவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒற்றுமையையும் தேசிய உயர்நெறியையும் பொருட்படுத்தாமல் ஒரு சில அரசியல்வாதிகள் இனப் பிரச்சனைகளை தூண்டுகின்றனர்.

ஒற்றுமை என்பது ஒன்றுபட்ட மலேசிய நாட்டின் உருவாக்கத்திற்கு தடையில்லாமலும் முரண்பாடு இல்லாமலும் வளரும் செயல்முறையாகும். நம் நாட்டு மக்களிடையே தேசிய அளவில் "மதிப்பு அடிப்படையிலான அமைப்பு" ஒன்றினை ஏற்படுத்தி சமூக உறவுகளுக்கிடையிலான கருத்தொற்றுமையை நிலைநிறுத்தி ஒற்றுமை வளர்க்கப்படுகிறது.

நன்னெறி பண்புகளை பின்பற்றுதல்

மலேசிய நாட்டின் ஒற்றுமை மற்றும் மதங்களுக்கான ஒருங்கிணைப்பை வலுப்படுத்தவும், வெளிநாட்டு தீயசக்திகளின் ஊடுருவல் இல்லாமல் இருக்கவும் நன்னெறி பண்புகளாகக் கருதப்படும் ஒற்றுமை, பறிமாற்றம், ஒத்துழைப்பு, இனங்களுக்கிடையிலான பரஸ்பரம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை போன்றவை மிக முக்கியாக கருதப்படுகின்றன.

உண்மையில், நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்தே இந்த நன்னெறி பண்புகள் ஏற்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இருப்பினும் நாம் ஒன்றை அறிந்துக் கொள்ள வேண்டும். பல இன மக்கள் வாழும் ஒரு நாட்டில் ஒற்றுமை என்பது ஒரு எளிதானது அன்று. பல வகையான இன்னல்களையும் முரண்பாடுகளையும் தந்திரமாகவும் கவனமாகவும் கையாளப்பட வேண்டும். அப்பொழுதுதான் இந்த ஒற்றுமையை நாம் நிலைநாட்ட முடியும்.

இனப்பாகுபாடே ஒற்றுமைக்கு முட்டுக்கட்டை

இனப்பாகுபாடே எப்பொழுதும் ஒற்றுமை செயல்பாட்டுக்கு ஒரு முக்கியமான முட்டுக்கட்டையாக விளங்குகிறது. மக்களின் பிரிவினைக்கு காரணமாக கருதப்படும் சக்திகளான அரசியல்வாதிகளும் சில பொறுப்பற்றவர்களும் தீய எண்ணங்களைச் செயல்படுத்திக் கொண்டு நாட்டின் தேசிய ஒருங்கிணைப்பிலிருந்து தவறி விடுகின்றனர்.

எனவே, ஒற்றுமைக்கான செயல்முறை புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சகிப்புத்தன்மை, ஏற்றுக்கொள்ளல் போன்றவற்றை வலுப்படுத்துகிறது. அதற்கு நாம் பயன்மிக்க செயல்திட்டங்களை உருவாக்கி அதை செயல்ப்படுத்த வேண்டும். இதன் மூலமே மதம், கலை கலாச்சாரம், சமூகம், இட வாரியாக பிரிந்துள்ள நாம் மலேசியா என்ற குடைக்குள் ஒற்றுமை உணர்வுடன் தேசிய அடையாளத்தை காத்துக் கொள்ள முடியும்.

ஒற்றுமைக்கான நடவடிக்கைகள்

நம் நாட்டில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை உணர்வு என்பது உயர்நெறி, புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை உள்ளடக்கியுள்ளது. இந்த எல்லா ஒற்றுமைக்கான நடவடிக்கைகளும் பல வகையான தேசிய திட்டங்களின் வழி வடிவமைக்கப்படுகின்றன. கூட்டரசு, சமூகம், கல்வி, கலை கலாச்சாரம், பொருளாதாரம் மற்றும் அரசியல் போன்ற பல வகையில் இந்த ஒற்றுமையுணர்வு நிலைநிறுத்தப்படுகின்றன.







நமது நாட்டின் ஒற்றுமை சீர்குழையாமல் இருக்க இது போன்ற தேசிய திட்டங்களை முறையாக காக்கப்பட்டு அதை வலுப்படுத்த வேண்டும். நமது நாடு சுதந்திரம் பெற்றது முதல் கடைப்பிடிக்கப்பட்டு போற்றப்பட்டு வரும் ஒற்றுமையில் சிறு பாதிப்பு அல்லது பிரிவினை வந்தாலும் அது நமக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

மக்களிடையே பிரிவினையை குறைத்து, இனங்களுக்கிடையே இடைவெளியைக் குறைத்து மலேசியாவில் உள்ள மாநிலங்களின் உறவை மேம்படுத்துவதே இந்த ஒற்றுமையின் அடிப்படை நோக்கம் மற்றும் திட்டமாகும்.

தியாக மனப்பான்மை வேண்டும்

எழுத்தாளரின் கருத்துபடி, பல இன மக்களிடையே தியாக மனப்பான்மை கடைப்பிடிக்க தயாராக இருந்தால் மட்டுமே தேசிய உயர்நெறி வலுப்படும். இன வாரியான எண்ணங்கள், கருத்துக்கள் மற்றும் உணர்வுகளில் வேற்றுமையில் ஒற்றுமையை தேட வேண்டும்.

இந்தத் தியாக மனப்பான்மை விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, புரிந்துணர்வு மற்றும் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையை மேம்படுத்தச் செய்யும். இதன் மூலம் மதங்களின் அடையாளம், இன பண்பாடு கலை கலாச்சாரம் போன்றவற்றை மதிக்க மற்றும் போற்ற ஒரு விழிப்புணர்வு தோன்றும்.

1மலேசியா கொள்கை

இதைப் போன்ற நற்குணங்களை நம் மக்கள் பின்பற்றுவார்களேயானால், இன பாகுபாடு, தப்பான எண்ணங்கள், சந்தேகங்கள் மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தும் எதிர்மறையான எண்ணங்கள் மற்றும் செயல்களைக் குறைக்கலாம். தேசிய ஒறுமைப்பாட்டை வழியுறுத்தும் 1மலேசியா கொள்கையானது மலேசிய பிரதமர் டத்தோ ஸ்ரீ நஜீப் துன் ரசாக் அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த ஒருமைபாட்டு கொள்கையானது சமநிலை கொள்கை, நீதி, நேர்மை, ஒற்றுமை, ஒருவருக்கொருவர் உதவுதல் போன்றவற்றை வலியுறுத்துகிறது. அதனால், 1மலேசிய கொள்கையானது இந்த நாட்டில் வாழும் உரிமை ஒருசார் இனத்திற்கு மட்டுமில்லாமல் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. மற்ற இனத்தை பொருட்படுத்தாமல் ஒருசார் இனத்திற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டால் இனங்களுக்கிடையிலான பிரிவினைக்கு வித்திடும்.

தேசிய கோட்பாடு மற்றும் அரசியலமைப்பு ஒரு அடித்தளமாக அமைகிறது

நமது அரசியலமைப்பில் இனங்களுகிடையிலான பல விசயங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இருப்பினும், நமது தேசிய கோட்பாடு என்பது நமது நாட்டின் சித்தாந்தம், தத்துவம் மற்றும் வாழ்க்கை வழிகாட்டியாகும். நாட்டு மக்கள் அனைவரும் நமது நாட்டின் அரசியலமைப்பை மதித்து, தேசியக் கோட்பாட்டை வலுவாக கைப்பற்றி பின்பற்ற வேண்டும்.

கடமையைத் தொடருதல்

மலேசிய நாட்டு மக்களின் ஒற்றுமையை வலுப்படுத்துவதில் அரசாங்கம் தன் கடமையைத் தொடர்வதை, பிரதமர் நஜீப்பால் முன்மொழியப்பட்ட தேசிய ஒற்றுமை ஆலோசனை மையம் (MKPN) மூலம் உறுதிபடுத்திக் கொள்ளலாம். முன்மொழியப்பட்ட இந்த மையம் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மையம் தக்க தருணத்தில் நிறுவப்பட்டுள்ளது. கடந்த 13 ஆவது தேர்தலின் மூலம் உருவான இன அடிப்படையிலான பிரிவினைக்கும் அரசியல் சித்தாந்தத்திற்கும் இது ஒரு முற்றுப்புள்ளியாக அமையட்டும்.

அதைத் தவிர, நமது அரசாங்கம் தேசிய சுபிட்ச சட்டம் என்று ஒன்றை தேச துரோகச் சட்டம் 1948 பதிலாக கொண்டுவந்துள்ளது. இந்த சட்டம் மூன்று கொள்கைகளைக் கொண்டுள்ளது.

ஒற்றுமைக்கான செயல்முறை புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சகிப்புத்தன்மை, ஏற்றுக்கொள்ளல் போன்றவற்றை வலுப்படுத்துகிறது. அதற்கு நாம் பயன்மிக்க செயல்திட்டங்களை உருவாக்கி அதை செயல்ப்படுத்த வேண்டும். இதன் மூலமே மதம், கலை கலாச்சாரம், சமூகம், இட வாரியாக பிரிந்துள்ள நாம், மலேசியா என்ற ஒரு குடையின் கீழ் ஒற்றுமை உணர்வுடன் தேசிய அடையாளத்தை காத்துக் கொள்ள முடியும்.



நாட்டின் முன்னேற்றத்தை தக்க வைக்க மக்களின் ஒற்றுமை மற்றும் அரசியல் நிலைத்தன்மை அவசியமாகிறது

சுதந்திரம் பெற்ற நாள் முதல், பல்வேறு இனம் மற்றும் மதத்தைக் கொண்ட மலேசிய மக்கள் வேற்றுமையிலும் ஒற்றுமையாக இருந்து வருகின்றனர். இவர்கள் நாட்டின் தூய இலட்சியங்களை நிறைவேற்றுவதில் உறுதி பூண்டுள்ளனர். இருப்பினும், 1969-ம் ஆண்டு மே 13-ல் நிகழ்ந்த இனக் கலவரம் நாட்டிற்கு பல நன்மைகளையே கொண்டுவந்துள்ளது. நாட்டை மேம்படுத்துவதற்கும், முன்னேற்றுவதற்கும் மற்றும் நவீனமயமாக்குவதற்கும் ஏதுவாக குறிப்பிடதக்க பல கொள்கைகளை அரசாங்கம் "சமூக பொறியியல்" வழி செயல்படுத்த இதுவே தூண்டுகோளாக அமைந்தது. மக்கள் அனுபவித்த மேம்பாடுகளும் முன்னேற்றமும் அவர்களின் சுபிட்சத்திற்கு வழிவகுத்தது.

தேசிய கொள்கை மற்றும் புதிய பொருளாதார கொள்கை மக்களை மறுசீரமைக்க உருவாக்கப்பட்டது. மேலும், தேசிய கல்வி கொள்கை, தேசிய மொழி கொள்கை, தேசிய ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்பு கொள்கை, தேசிய கலாச்சார கொள்கை என்று இன்னும் பல கொள்கைகள் ஒற்றுமையான, ஜனநாயக, தாரளவாத, முற்போக்கான, அறிவியல் மற்றும் நியாயமான மற்றும் பாராபட்சமில்லா நாட்டையும் மக்களையும் உருவாக்கும் நோக்கத்தில் அரசாங்கம் இந்த முன் முயற்சிகளை அறிமுகப்படுத்தியது.

இனம் மற்றும் மொழிக்கு அப்பாற்பட்ட அனைத்து மலேசிய மக்களுக்கான அரசாங்கத்தின் இந்த மேம்பாட்டு செயல்முறையில் சமூக நீதி எனும் தனிமம் அடங்கியுள்ளது. இதன் விளைவாக, நாடு முன்னேற்ற பாதையில் பீடு நடை போட்டது. மக்களோ முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டின் கனியை ருசித்த வண்ணமிருந்தனர். சமநிலையற்ற வளர்ச்சி மற்றும் வீண்வாதங்கள் நாட்டின் சில பகுதிகளில் மறுக்கப்பட முடியாத ஒன்றாகிப்போனாலும் அதனை அரசாங்கம் மறுசீரமைப்பு செய்ய தவறியதில்லை.

நாட்டின் மேம்பாட்டு செயல்முறைகள் செவ்வனே காலத்திற்கேற்ப நடைபெற, அரசாங்கம் புதிய பொருளாதார கொள்கை (1971-1990), தேசிய மேம்பாட்டு கொள்கை (1991-2000), தேசிய தூரநோக்கு கொள்கை (2001-2010) மற்றும் தற்போதைய தேசிய உருமாற்று கொள்கை போன்ற பிரதான தேசிய கொள்கைகளை அமல்படுத்தி வருகிறது. அதே வேளையில் மலேசிய மக்கள் ஒற்றுமை, ஜனநாயகம், தாராளவாதம் மற்றும் முற்போக்கு உடையவர்களாக மாற்றுவதில் அரசாங்கம் ஒருபோதும் தவறியதில்லை மற்றும் பின்வாங்கியதும் இல்லை.



இனம் மற்றும் மொழிக்கு அப்பாற்பட்ட அனைத்து மலேசிய மக்களுக்கான அரசாங்கத்தின் இந்த மேம்பாட்டு செயல்முறையில் சமூக நீதி எனும் தனிமம் அடங்கியுள்ளது. இதன் விளைவாக, நாடு முன்னேற்ற பாதையில் பீடு நடை போடுகிறது



தன்னையும் தன் நாட்டையும் மேம்படுத்திக்கொள்ள மக்களுக்கு விரிவான வாய்ப்பு தரப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தேசிய சமூக கொள்கை சமூகத்தில் ஒவ்வொருவரும் தங்களது திறனை உகந்த அளவு வளர்க்க ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஆரோக்கியமான சமூக சூழலையும் ஒற்றுமை, நெகிழ்த்திறன், ஜனநாயகம், நன்னெறி, சகிப்புத்தன்மை, முன்னேற்றம், அன்பு, நியாயம் ஆகிய கூறுகளை அடிப்படையாக கொண்டது.

நாட்டை உச்சிக்கு கொண்டு செல்ல, மக்கள் பெரும் உற்சாகத்துடன் கடினமாக உழைக்கின்றனர். 2020 தூரநோக்கு சிந்தனை அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து நாடு முன்னேற்ற பாதையில் செல்கிறது. 2020ல் மலேசியாவை முன்னேற்றமடைந்த நாடாக உருவாக்குவது கடந்த 1991-ம் ஆண்டு துன் டாக்டர் மகாதீர் முகமதுவின் தூர நோக்கு பார்வையால் தூண்டப்பட்ட ஒன்றாகும். இனி உருவாக்கப்படும் இம்முன்னேற்றம் மக்களிடையே நல்லிணக்கம், செல்வச் செழிப்பு, ஒற்றுமை, விசுவாசம், அர்பணிப்பு மற்றும் தேசப்பற்று நிறைந்ததாக இருக்கும்.

டத்தோ ஸ்ரீ நஜிப் துன் ரசாக் அறிமுகப்படுத்திய தேசிய உருமாற்று கொள்கை வழி உயர் வருவாய் பெரும் நாடாக தற்பொழுது மலேசியா முன்னேறி வருகிறது. தேசிய உருமாற்று கொள்கை நான்கு மையங்களை அடிப்படையாக கொண்டது. அதாவது அரசாங்க உருமாற்றுத் திட்டம் (GTP), பொருளாதார உருமாற்றுத் திட்டம் (ETP), அரசியல் உருமாற்றுத் திட்டம் (PTP), சமூக உருமாற்றுத் திட்டம் (STP), தேசிய உருமாற்றுக் கொள்கை (DTN) போன்றவை நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் மட்டுமே குறியாக இல்லாமல் மக்களின் நலனிலும் தன் பங்கை ஆற்றுகிறது.

உண்மையில் நாட்டின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் வடிவமைத்து மற்றும் நடைமுறைப்படுத்திய பல்வேறு கொள்கைகளும் மற்றும் அணுகுமுறைகளும் உண்மையான சுதந்திரத்தின் கருப்பொருளை நிரப்பியுள்ளது. நம் நாட்டை நம் சொந்த பாணியில் மற்றும் விருப்பத்திற்கேற்ப நிர்வகிக்க மற்றும் மேலாண்மை செய்யும் சுதந்திரம் நமக்கு உண்டு. மேலும் கூறின், அனைத்துலக அரங்கில் நாடு தொடர்ந்து இறையாண்மை மற்றும் கண்ணியமான ஒன்றாக திகழச் செய்ய வேண்டும்.

இங்கு நாம் புரிந்துக் கொள்ள வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால், நம் நாடு அடைந்துவரும் முன்னேற்றத்திற்கான முக்கிய காரணம் மக்களிடம் காணப்படும் ஒற்றுமை மற்றும் தொடரும் நிலையான அரசியலே ஆகும். இவ்வாறு, தொடர்ந்து காணப்படும் ஒற்றுமை மற்றும் நிலையான அரசியல், அரசாங்கம் பல முன்னேற்ற திட்டங்களைச் சுமூகமான மற்றும் திறமையாக தீட்ட வழிவகுக்கிறது என்றாலும், சில நேரங்களில் இந்நிலமையை மாற்ற சில ஆட்சேபனை குரல்கள் ஓங்கினாலும் அது வெற்றிகரமாக முறியடிக்கப்படுகிறது.

இந்த ஆட்சேபனை குரல்கள் சட்டம் மற்றும் அர்பணிப்பு தன்மைக் கொண்ட பாதுகாப்பு படையால் மட்டுமே கட்டுப்படுத்தப்படுவதில்லை. மாறாக, மக்களிடம் காணப்படும் வலுவான ஒற்றுமையும்தான். இதனாலே, அரசாங்கத்தை பலவீனப்படுத்துவதும் மற்றும் சமூக நல்லிணக்கத்தை அச்சுறுத்தும் நச்செண்ணங்களை மக்களிடையே பரப்புவதில் நோக்கம் கொண்ட தீவிரவாதிகளின் தீய பிரச்சார முயற்சிகள் மக்களை எளிதில் கவருவதில்லை.

ஒரு வலுவான மற்றும் உறுதியான அரசாங்கத்தை நிலைநாட்ட மக்களின் தொடர் ஆதரவு அத்தியாவசியமாகும். இது தொடர்ந்து மக்களிடையே ஒற்றுமை மற்றும் நிலையான அரசியல் சூழ்நிலையை உறுதிப்படுத்தும். இது சகல விதத்திலும் மக்களின் வாழ்வில் வளத்தை கொண்டு வருவதோடு நின்றுவிடாமல் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான முன்னேற்ற கொள்கைகளைத் தொடர வழி வகுக்கிறது. நிலையான அரசியல் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நம் நாட்டில் முதலீடு செய்யும் நம்பிக்கையைக் கொடுக்கும்.

நாட்டின் சுதந்திரம் மற்றும் இறையாண்மையை உறுதிச்செய்ய நிலையான அரசியல் முக்கிய பங்காற்றுகிறது. இந்நாட்டின் சுதந்திரம் மற்றும் இறையாண்மையை எதிரியிடம் அடகு வைக்க நாமே வழி செய்யக்கூடாது. சிரியா மற்றும் ஈராக்கைப் போல நாமும் சின்னா பின்னமாகி, பிளவுப்பட்டு, கொலைகள் செய்து வாழ வேண்டுமா? மக்களின் ஒற்றுமை மற்றும் நாட்டின் அரசியல் நிலைத்தடுமாறினாலோ அல்லது குழம்பினாலோ, இச்சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து தீய சக்திகள் காத்துக் கொண்டிருப்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.



மலேசிய கூட்டமைப்பில் முன்னேறிய சபா மற்றும் சரவாக்

மலேசியா கூட்டமைப்பில் சபா மற்றும் சரவாக் மாநிலங்களும் அடங்கும். செப்டம்பர் 16, 1963-ல் மலேசியா கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. "மலேசியா கூட்டமைப்பு" எனும் பெயர் கூட்டரசு அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 1-ல் கூறப்பட்டுள்ளது. பிரிவு 1, உட்பிரிவு (2)ல், ஜோகூர், கெடா, கிளந்தான், மலாக்கா, நெகிரி செம்பிலான், பகாங், பேராக், பெர்லிஸ், பினாங்கு, சபா, சரவாக், சிலாங்கூர் மற்றும் திரங்காணு ஆகியவை கூட்டரசு மாநிலங்கள் என தெளிவாக கூறுகிறது. (கோலாலம்பூர், புத்ராஜெயா மற்றும் லாபுவான்) ஆகியவை கூட்டரசு பிரதேசம் என்று பிரிவு 1 உட்பிரிவு (4) கீழ் விபரிக்கப்பட்டுள்ளது.

கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேசம், அரசியலமைப்புச் சட்டம் (திருத்தம்)(இல.2) 173 கீழ் நிறுவப்பட்டது. தொடர்ந்து புத்ராஜெயா கூட்டரசுப் பிரதேசம் (திருத்தம்) (இல.2) கீழ் லாபுவான் கூட்டரசுப் பிரதேசம் மற்றும் அனைத்து கூட்டரசுப் பிரதேசங்களும் உருவாக்கப்பட்டது. இதன் வழி, மலேசிய கூட்டமைப்பு மற்றும் கூட்டரசுப் பிரதேசங்களையும் சேர்த்து இப்போது 14 மாநிலங்களைக் கொண்டுள்ளது.

கூட்டமைப்பில் மேலும் மாநிலங்களைச் சேர்க்க நினைத்தால் கூட்டரசுப் அரசமைப்பின் 2-வது பிரிவு பின்வருமாறு குறிப்பிடுகிறது, அதாவது நாடாளுமன்ற சட்டத்தின் மூலம்:

அ) கூட்டமைப்பில் மற்ற மாநிலங்களை சேர்க்கலாம், மற்றும்

ஆ) எந்தவொரு மாநிலத்தின் எல்லைகளையும் மாற்றலாம். ஆனால் மாநில எல்லையை மாற்றும் சட்டம் (மாநில சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்டவை) (Badan Perundangan Negeri) பாதிக்கப்பட்ட மாநிலத்தின் மற்றும் அரசர்கள் மாநாட்டின் (Majlis Raja-Raja) ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும்.

இதன் அர்த்தம், மாநில சட்டமன்றம் மலேசியாவை விட்டு விலகும் தீர்மானத்தை நிறைவேற்றினாலும், அது நிச்சயமாக அரசர்கள் மாநாட்டின் ஒப்புதலை பெற்றிருக்க வேண்டும். உண்மையில், 20 கோரிக்கைகளின் பட்டியலில் பிரிவு 7ல், கூட்டமைப்பிலிருந்து பிரிக்க அல்லது பிரிந்து செல்வதற்கான உரிமை இல்லை என்று கூறப்பட்டுள்ளது. சபா, சரவாக்கின் இணைப்பு, மலேசியா ஒப்பந்தத்தை தவிர, மலேசியா மசோதாவிலும் பட்டியலிடப்பட்டது. பின்னர் 1963-ஆம் ஆண்டு Cobbold ஆணைக்குழுவின் அறிக்கை வழி PBB ஒப்புதல் வழங்கியதால், மலேசியச் சட்டத்திலும் சபா சரவாக் மலேசியாவுடன் இணைக்கப்பட்டது. ஆனால், சில நிபந்தனைகளுக்கும் மற்றும் அரசியலமைப்பு விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டதால் மட்டுமே இவ்விணைப்பு சாத்தியமானது. இதுவே, அம்மாநிலங்களை மலேசிய கூட்டமைப்பில் ஒன்றாக கட்டிப்போட்டது.

மலேசியா ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்கள் அனைத்தும் மலேசியா சட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், இது மலேசியா அரசியலமைப்பிலும் இணைக்கப்படும். 1963-ஆம் ஆண்டு மலேசியா ஒப்பந்தத்தின் சாராம்சம்:

அ) வெளிநாட்டு விவகாரங்களின் மேலாண்மை, மத்திய அரசாங்கத்தின் கைகளில் உள்ளது.

ஆ) சபா மற்றும் சரவாக் தவிர பிற மாநிலங்களில் இஸ்லாம் அதிகாரப்பூர்வ மதம்.

இ) மலாய் தேசிய மொழியாகும்

ஈ) சுதந்திரமடைந்த 10 ஆண்டு காலம் வரையில் தான் ஆங்கிலம் சபா மற்றும் சரவாக்கின் அதிகாரப்பூர்வ மொழி

உ) நாடாளுமன்ற இட ஒதுக்கீடு, சரவாக் (24 இடங்கள்), சபா (16 இடங்கள்) மற்றும் சிங்கப்பூர் (15 இடங்கள்) மற்றும்

ஊ) சபா மற்றும் சரவாக் பூர்வீக (பூமிபுத்ரா) மக்களுக்கு மலாயா கூட்டமைப்பு பூர்வீக (பூமிபுத்ரா) மக்களைப் போல் சம உரிமை லழங்கப்படும்.

முன்னேற்ற கனியை அனுபவிக்கும் சபா மற்றும் சரவாக்

வளமான பண்பாட்டு பாரம்பரிய பகிர்வு மற்றும் ஒரே அரசியல் பிரிவையும் அடிப்படையாகக் கொண்டு வெற்றிகரமாக உருவானது "மலேசியா பெரிய குடும்பம்". தென் சீனக் கடலால் பிரிக்கப்பட்டாலும், அம்மாநிலத்தின் ஒவ்வொரு குடிமகனும் அவர்களை மலேசியா பெரிய குடும்பத்தின் ஒரு பகுதியாகவே உணருகின்றனர். 51 வருடங்களாக மலேசியா கூட்டமைப்பில் பின்னடைவிலிருந்த சபா மற்றும் சரவாக் மாநிலங்கள், இப்போது துரித வளர்ச்சியடைந்து முன்னேறி விட்டன. கட்டம் கட்டமாக நடந்த துரித முன்னேற்றங்களால் அவ்விரு மாநிலங்களும் முற்போக்குடனும் ஆற்றல் மிகுந்தும் மிளிர்கின்றன.

சிறந்த கல்வி மற்றும் பரந்த வேலை வாய்ப்பு அமைந்ததால் இரு மாநிலங்களின் மக்களும் முற்போக்குடைய சிந்தனை உடையவர்களாவர். திறமையும் கல்வியறிவும் கொண்ட இளைஞர்கள் தொடர்ந்து அந்தந்த மாநிலங்களுக்குத் தங்களது பங்கையாற்றினர். அவர்கள் அடைந்த இம்முன்னேற்றம் மாநில மற்றும் மத்திய அரசாங்கத்திற்கு இடையே உள்ள ஒத்துழைப்பையே பிரதிபலிக்கிறது. சபா மற்றும் சரவாக் முன்னேற்ற நிலையை அடைய மத்திய அரசு தொடர்ந்து தங்கள் ஆதரவை நல்கியது. தேசிய உருமாற்று கொள்கையின் அடிப்படையில், சபா மற்றும் சரவாக் மக்கள் மேலும் கண்கூடான முன்னேற்றங்களை அனுபவித்து வருகின்றனர்.

சபா மற்றும் சரவாக் மாநில அரசு தங்கள் மாநிலத்திலுள்ள பலதரப்பட்ட இனத்தினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த கடுமையாக உழைத்து வருகிறது. இதனாலே இரு மாநிலங்களிலும் சமூக மற்றும் பொருளாதார துறைகளில் சாதகமான விளைவுகளை அடைந்து வருகின்றன. இதுவே, அவர்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக் கூடிய செயல்திறனை தோற்றுவிக்க உதவியது. மத்திய அரசாங்கத்தின் உதவியால், இரு மாநில அரசும் தங்கள் மாநிலங்களின் நகர்ப்புற மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கு பல உத்திகளைத் திட்டமிட்டு நிறைவேற்றியது. RMK10 திட்டத்தின் பெரும்பகுதி நிதி இவ்விரு மாநிலங்களின் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டது.

கடந்த ஆண்டு சபா மற்றும் சரவாக்கின் பொருளாதாரம் ஐந்து விழுக்காடு வளர்ச்சிக் கண்டது. இவ்வாரோக்கியமான வளர்ச்சிக்கு உந்துசக்தியாக விளங்கியது பலதரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளே ஆகும். அவை திட்டமிட்டு செயல்படுத்தப்பட்ட ஸ்கோர் (Sarawak Corridor of Renewable Energy (SCORE) எனும் எரிசக்தி மையம் மற்றும் SDC (Sabah Development Corridor) எனும் சபா வளர்ச்சி மையம் ஆகும். இவ்விரண்டு முன்னேற்ற திட்டங்களும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை தங்கள் பக்கம் திரும்பி பார்க்க வைத்தது என்று கூறுவதில் ஐயமில்லை. இதன்வழி வரும் 2015-ஆம் ஆண்டில் உள்நாட்டு உற்பத்தி ஆறு விழுக்காடு வளர்ச்சியை எட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சபாவின் வளர்ச்சிக்கு SDC (Sabah Development Corridor) எனும் சபா வளர்ச்சி மையம் தூண்டுகோலாக திகழ்கிறது

சபா வளர்ச்சி மையம் அம்மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு ஒரு புதிய தோற்றத்தை ஏற்படுத்தியது. இதனால் தேசிய முன்னேற்ற மின்னோட்டத்திற்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக்கொண்டு மேலும் பொழிவடைந்தது. 18 ஆண்டுகளுக்கு மேல் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம் சுமார் RM105 பில்லியன் முதலீட்டை ஈர்த்தது என்றால் அது மிகையில்லை. உயர் தாக்க திட்டங்களில் SDC வெற்றியடைந்தால் அதன் பலனை மக்கள் அனுபவித்தனர்.

SDC கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் சபா மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் நாட்டின் வறுமையை தொடர்ச்சியாக குறைக்கும் ஆற்றலுடையது. இதனால், நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளுக்கு இடையே உள்ள இடைவெளியை குறைக்க முடியும். ஆகவே, SDC –யின் இத்திட்டத்தின் வழி, ஆசியாவில் மிக வசதியான ஐந்து மாநிலங்களின் மத்தியில் சபாவும் இடம் பெரும் என்று எதிர்பர்க்கப்படுகிறது.

18 ஆண்டுகளுக்கு மேலாக வடிவமைக்கப்பட்டுள்ள SDC-யின் அபிவிருத்தி திட்டங்களால், இனி வரும் காலங்களில் சபா ஐந்து அம்சங்களில் எழுச்சியடையவிருக்கிறது. அவை:

அ) வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளில் சபாவை தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் முக்கிய வாயிலாக உருவாக்குதல்.

ஆ) இனம் மற்றும் மத வேறுபாடு இல்லாமல், சபா மக்கள் நல்லிணக்கத்துடன் மற்றும் நிம்மதியாக வாழும் ஒரு மாநிலமாக மாற்றுதல்.

இ) சிறந்த வாழ்க்கைத் தரத்தை உறுதிசெய்ய அனைத்து அம்சங்களிலும் தொழில்நுட்பத்தை பங்கு பெற செய்தல்.

ஈ) சிறந்த வேலை வாய்ப்பு வழங்கும் மாநிலமாக சபாவை உருவாக்குதல்.

உ) உயர்த்தர வாழ்க்கை, பன்முகத்தன்மை நிறைந்த கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் நல்ல சூழல் கொண்ட வசதியான இடமாக சபா திகழும்.

2008-ஆம் ஆண்டு ஜனவரி 29-ல் தொடங்கப்பட்ட SDC மொத்தம் 79 வளர்ச்சித் திட்டங்களில் 49 திட்டங்களை வரும் 2020ல் அமல்படுத்த உத்தேசம் கொண்டுள்ளது. இது சுற்றுலா, செம்பனை, விவசாயம், எண்ணெய், எரிவாயு மற்றும் மின்சக்தி, கல்வி, உற்பத்தி மற்றும் தளவாடங்கள் போன்ற முக்கிய துறைகளில் கவனம் செலுத்தும் வண்ணம்



RM247 மில்லியன் மதிப்புள்ள சண்டாகானிக் POIC எனப்படும் செம்பனை தொழில்துறை குழு திட்டம் ஒரு முக்கிய மற்றும் அதிக செலவுகளைக் கொண்ட SDC-யின் திட்டமாகும்.

வடிவமைக்கப்பட்டுள்ளது. SDC-யின் திட்டங்கள் சபாவை சேர்ந்தவர்களுக்கு தொழில், வருமானம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட (SDA) மூல வளர்ச்சி பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

SEDIA எனப்படும் சபா பொருளாதார முன்னேற்றம் மற்றும் முதலீட்டு அதிகாரிகளின் அறிக்கையிலும் மற்றும் (17 மார்ச் 2013) பெர்னாமா தகவலின்படி, சுமார் RM1 பில்லியன் செலவில் சபா வளர்ச்சி மையத்தின் கீழ் 24 வளர்ச்சி திட்டங்கள் டிசம்பர் 2012 ஆண்டு செயல்படுத்தப்படவுள்ளன.

சாலைகள் அமைத்தல், வன பாதுகாப்பு, கால்நடை மையம், சிறு தோட்ட திட்டங்கள், MESEJ, சுற்று சூழல், கல்வி மையங்களின் உள்கட்டமைப்பு வசதி, படைப்பு உள்ளடக்க முன்னேற்றத்திற்கான காப்பக மையம் போன்ற திட்டங்கள் மேற்கூறிய திட்டங்களில் அடங்கும். கடின உழைப்பாளிகளின் திறமையை அதிகரித்து மற்றும் வறுமையை குறைப்பதே, MESEJ-யின் பயனுள்ள மற்றும் திட்டமிடப்பட்ட ஒருங்கிணைந்த அணுகுமுறையாகும்.

RM247 மில்லியன் மதிப்புள்ள சண்டாகானின் POIC எனப்படும் செம்பனை தொழில்துறை குழு திட்டம் ஒரு முக்கிய மற்றும் அதிக செலவுகளைக் கொண்ட SDC-யின் கீழுள்ள திட்டமாகும். மேலும், உள்நாட்டு பயன்பாடு மற்றும் ஏற்றுமதிக்காக இறைச்சி மற்றும் பால் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க கெனிங்காவ் (Keningau) வட்டாரத்தில் RM50 மில்லியன் மதிப்புள்ள கெனிங்காவ் ஒருங்கிணைந்த கால்நடை மையம் (KLIC) உருவாக்கப்பட்டுள்ளது.

கூடுதலாக, SDC முயற்சியின் கீழ் மற்றொரு உயர் தாக்க திட்டம் RM180 மில்லியன் செலவை எட்டி பிடிக்கும் சண்டாகான் கல்வி மையமாகும். இத்திட்டம் கல்வி அமைப்புகளில் மட்டும் கவனம் செலுத்தாமல் சர்வதேசத் தரத்திலான, முழுமையான நவீன பொது வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. RM20 மில்லியன் செலவில் உள்ளடக்க முன்னேற்ற காப்பக மையம் SDC-யின் கீழ் பெனாம்பாங் மாவட்டத்தில் தோற்றுவிக்கப்பட்டது. இது, பங்கேற்பாளர்களின் உருவாக்கம் மற்றும் படைப்பாற்றலை வெளிப்படுத்தி அவர்களின் திறமைகளையும் திறனையும் முன்னேற்றும் மையமாக விளங்கியது. இம்மையம் உள்ளடக்க தொடர்பிலான திருத்தம் (editing), ஒலி (Audio)/ஒளி (Visual), ஒளிப்பரப்பு அறை, அசைவூட்டு (Animation) காட்சியகங்கள், சிறு திரையரங்கு (mini theater) மற்றும் மென்பொருள் போன்ற வசதிகளுடன் மேலும் மெருகூட்டப்படும்.

சரவாக் வளர்ச்சிக்கு ஸ்கோர் (Sarawak Corridor of Renewable Energy SCORE) எனும் எரிசக்தி சுத்திகரிப்பு மையம் தூண்டுகோலாக திகழ்கிறது

2020 தொலைநோக்கு சிந்தனைக்கு இணங்க, சரவாக்கில் ஸ்கோர் (Sarawak Corridor of Renewable Energy SCORE) எனும் எரிசக்தி சுத்திகரிப்பு மையம், அம்மாநிலத்தை வரும் 2020 நூற்றாண்டில் வளர்ந்த நாடு என்ற நிலையை அடைய உந்துசக்தியாக செயல்படுகிறது. SCORE சரவாக் மாநிலத்தின் மைய பகுதியில் உருவாக்கப்பட்டாலும், பிந்துளு, காபித், சிபு, மூகா மற்றும் சரிகெய் பகுதிகளும் அதில் அடங்கும். இப்பகுதிகள் சரவாக்கின் 57 விழுக்காடு பரப்பளவை கொண்டிருப்பதால், இது நாட்டின் மிகப் பெரிய வளர்ச்சி மையமாக கருதப்படுகிறது. ஸ்கோர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை மையமாகக் கொண்டு வளரும் தொழில் துறையில் கவனம் செலுத்துகிறது.





ஸ்கோர் திட்டங்களான புனல் மின் உற்பத்தி திட்டங்கள் பொருளாதார வளர்ச்சி தொடர்வதற்கு உறுதி செய்கிறது. இது வர்த்தக மற்றும் குடியிருப்பு துறைகளின் முன்னேற்றத்திற்கும், புதிய தொழில் துறை மேம்பாட்டிற்கும் மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கும் உதவுகிறது. ஸ்கோர் வளர்ச்சியின் வழி சுமார் 1.6 மில்லியன் வேலை வாய்ப்புகள் உருவாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. மேலும், சரவாக் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் வருமானத்தையும் இத்திட்டம் மேம்படுத்தும்.

கூட்டரசின் உத்திகள் மற்றும் மானியங்கள் வழி சரவாக் மாநிலத்தின் வறுமை விகிதம் (1976) 64.4 விழுக்காட்டிலிருந்து (1987) 37.3 விழுக்காடு வெற்றிகரமாக குறைக்கப்பட்டது. தற்பொழுது 7 விழுக்காடு என்ற விகிதத்தில் உள்ளது. சுகாதார துறையில் (Applied Food & Nutrition Project) (AFNP) ஊட்டச்சத்து திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் அமல்படுத்தப்பட்டன. அவை, கிராமப்புற மக்களுக்கு சுகாதாரத்தின் அவசியம், உணவு தயாரிக்கும் முறை மற்றும் சுகாதார விதிகள் போன்ற கல்வியை புகட்டுகின்றன. குறிப்பாக, சரவாக் நதிக்கரை மக்களின் வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைப்பாட்டை களைய மேற்கொள்ளப்பட்டது.

டாயாக் சமூகத்தினரும் புறந்தள்ளப்படவில்லை. SALCRA மற்றும் LCDA அதாவது 1980-ஆம் ஆண்டு தொடங்கி, பின்பு 1963-ஆம் ஆண்டு வரை NCR நிலங்களை மேம்படுத்த மாநில அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்டது. இதனால், கிராமப்புற மக்கள் குறிப்பாக டாயாக் சமூகத்தினர் பொருளாதார அபிவிருத்தி மற்றும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைய உதவியது. மாநில அரசாங்கம் “longhouse”-ல் வசிப்பவர்களுக்கு தொடர்ந்து தன் கவனத்தை செலுத்தும் வண்ணம் அரசாங்கத்தின் முன்னேற்ற திட்டங்களில் சிறப்பு பரிசீலனைகள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டு முன்னேற்றத்தை இவர்களும் நுகர வழி செய்துள்ளது. சுத்தமான குடிநீர், சாலைகள், மின்சாரம் மற்றும் வீடுகள் உட்பட உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தருதல் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களின் இடையே உள்ள வாழ்க்கை தர இடைவெளியை குறைக்க முடியும். மேலும், சரவாக்கில் பல பகுதிகளிலும் இந்நிலை மாறும்.

சில தரப்பினரின் வருத்தம்

உண்மையில், இரு மாநிலத்தின் ஒற்றுமை மற்றும் அரசியல் நிலைத்தன்மையே முதலீட்டை ஈர்க்கவும் மற்றும் வணிக வளத்தை பெருக்கவும் ஒரு முக்கிய காரணியாகும். இப்போது, சரவாக் மாநிலத்தை வழிநடத்திச் செல்லும் டான் ஸ்ரீ அதனான் சதெம் மற்றும் சபாவிற்கு தலைமை வகிக்கும் டத்தோ ஸ்ரீ பங்லிமா மூசா அமான் இருவரும், தங்கள் மாநிலங்களில் மக்கள் நலன் கருதி பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக செழிப்பை அதிகரிக்க உறுதி பூண்டுள்ளனர்.

எனினும், இரு மாநிலங்கள் அனுபவித்து வரும் சுபீட்சத்தையும் மகிழ்ச்சியும் கண்டு சிலர் மனம் குமுறுகின்றனர். உண்மையற்ற பல விசயங்கள் அரசியல் ஆக்கப்படுகின்றன. இம்மாநிலங்களில் இறையாண்மைக்கு ஊரு விளைவிக்க சிலர் எதையும் செய்ய தாயாராக உள்ளனர். மேலும், சபாவை மலேசியாவிலிருந்து பிரித்து செல்லவும் சிலர் தீவிரம் காட்டுகின்றனர். நிச்சயமாக நம் கண்களுக்குப் பலப்படாத சில வெளித்தரப்பினர் இப்பிரிவினைவாத கட்சிகளை ஆதரிக்கின்றனர் என்பதில் ஐயமில்லை.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் சூலு தீவிரவாதிகள் சபாவில் (லஹாட் டாது) உட்புக உள்ளிருக்கும் சிலர் துணை புரிந்திருக்க கூடும் என்பது மறுப்பதற்கில்லை. இருப்பினும், இப்பிரச்சனை அனுசரிக்க முடியாத ஒன்று என்று அரசாங்கம் உறுதியளித்தது. சபாவின் சுதந்திரத்தில் எந்த வெளி அல்லது உள்சக்திகள் தலையிட முடியாது என்றும் அரசாங்கம் வாக்குறுதியளித்துள்ளது. எவ்வாறு ஆயினும், இந்த விசயத்தில், இரு மாநில மக்களின் ஒற்றுமையும் மற்றும் மாநில, கூட்டரசு அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் தீய நோக்கத்துடன் செயல்படும் இப்பிரிவினரை கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.



தாமிரம்

தாமிரம் அல்லது செம்பு பாத்திரத்தில் நிரப்பப்பட்ட தண்ணீரை குடித்தால் நாம் ஆரோக்கியமாக இருக்கலாம் என்பது பழங்காலமாக இந்தியாவில் நிலவி வரும் நம்பிக்கைமயாகும். பானை அல்லது குடம் வடிவத்தில் உள்ள தாமிர பாத்திரத்தில் நம் தாத்தா பாட்டி தண்ணீர் பருகுவதை நாம் கண்டிருப்போம். தாமிர பாத்திரத்தில் நிரப்பப்பட்ட தண்ணீரால் கிடைக்கும் உடல் நல பயன்களைப் பெறுவதற்கு பலரும் தண்ணீரை தாமிர கோப்பையில் நிரப்பி பருகுகின்றனர். ஆனால், இந்த நம்பிக்கையில் அறிவியல் சார்ந்த உண்மை ஏதேனும் உள்ளதா என்று பார்ப்போம். இந்திய பண்பாட்டின் படி, தாமிர பானையில் இருந்து குடிப்பது ஆயுர்வேதத்தின் அடிப்படையாகும். ஆயுர்வேதத்தின் பண்டைய அறிவியலின் படி, உடம்பில் உள்ள மூன்று தோஷங்களான கபம், பித்தம் மற்றும் வாதம் போன்றவற்றை சரியான அளவில் சமநிலையுடன் வைத்திருக்க தாமிரம் உதவுகிறது. அதனால் தாமிர பானையில் இருந்து தண்ணீரை குடித்தால், உங்கள் உடலில் உள்ள இந்த தோஷங்கள் சமநிலையுடன் பராமரிக்கும். அறிவியலின் பார்வையில், தாமிரம் என்பது உடலுக்கு தேவையான தாமிரமாகும். இதுப்போக, தண்ணீர் மக்கி போகாமல் இருக்க தாமிரம் ஒரு எலெக்ட்ரோலைட்டாக செயல்படும். அதனால் தாமிர பாத்திரத்தில் வைத்துள்ள தண்ணீரை பருகுவதால் கிடைக்கும் பல்வேறு உடல்நல பயன்கள் கீழ்வருமாறு:-

தாமிர பாத்திரத்தில் தண்ணீரைக் குடிப்பதால் கிடைக்கும் 10 நன்மைகள்

தண்ணீரில் உள்ள நோய் கிருமிகளை ஒழிக்கும் குணத்தை கொண்டுள்ளது தாமிரம். முக்கியமாக வயிற்று போக்கினால் உண்டாகும் ஈ-கோலி போன்ற கிருமிகளுக்கு எதிராக இது சிறப்பாக செயல்படும். அதனால் தாமிர பானையில் வைக்கப்பட்டுள்ள தண்ணீர் இயற்கையாகவே சுத்தமானவையாக இருக்கும்.

தைராய்டு செயல்பாட்டை ஒழுங்குப்படுத்தும்

தாமிரம் என்பது அரியக் கணியமாகும். தைராய்டு சுரப்பி சீராக செயல்பட இது அதிமுக்கியமானதாக கருதப்படுகிறது. பல நேரங்களில், தாமிர குறைபாடு இருக்கையில், தைராய்டு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் உண்டாகும். தாமிர பானையில் உள்ள தண்ணீரை குடிப்பதால் உடல்நல பிரச்சனைகளை சமநிலையில் வைத்திடும்.

கீழ்வாதம் வலியை குணப்படுத்தும்

தாமிரத்தில் அழற்சி நீக்கும் குணங்கள் அளவுக்கு அதிகமாக அடங்கியுள்ளது. கீழ்வாதத்தினால் மூட்டுகளில் ஏற்படும் வலியை குணப்படுத்த இது பெரிதும் உதவுகிறது.

புண்களை வேகமாக குணப்படுத்தும்

புதிய அணுக்களை உருவாக்கி அதனை வேகமாக வளரச் செய்ய தாமிரம் உதவும். இதனால் புண்கள் வேகமாக குணமாகும். இதிலுள்ள வைரஸ் நீக்கி மற்றும் கிருமிகளை நீக்கி குணங்கள் தொற்றுக்களின் வளர்ச்சியை தடுக்கும்.

மூளை நடவடிக்கைகளை ஊக்குவிக்கும்

மூளையில் உள்ள நரம்பணுக்களுக்கு மத்தியில் உள்ள இடைவெளிகளைப் பாதுகாக்க மயலின் உறைகள் அதனை மூடும். இந்த மயலின் உறைகளை உருவாக்க கொழுப்பு வகைப் பொருட்களை தொகுக்க தாமிரம் உதவுகிறது. இது போக வலிப்பு வராமலும் அது தடுக்கும்.

செரிமானத்தை மேம்படுத்தும்

வயிற்றை மெதுவாக சுருக்கி விரிவாக்க ஊக்குவிக்கும் அறிய குணத்தை தாமிரம் கொண்டுள்ளது. இதனால் செரிமானம் சிறப்பாக நடைபெறும். அதனால் தான் தாமிரம் கலந்துள்ள தண்ணீரை பருகினால் ஆரோக்கியமான செரிமான அமைப்பை பெற்றிடலாம்.

இரத்த சோகையை எதிர்க்கும்

நம் உடலில் இரத்த சிவப்பணுக்களின் உற்பத்தியில் அதிகரிக்க தாமிரம் உதவுகிறது. இரத்த சோகையை எதிர்க்க இரும்பு மிக முக்கியமான கனியமாகும். இதற்கு தாமிரமும் சிறிய அளவில் தேவைப்படும்.

கர்ப்ப காலத்தின் போது

கர்ப்ப காலத்தில் உங்களையும், உங்கள் குழந்தையும் பாதுகாக்க உங்கள் நோய் எதிர்ப்பு சக்தி விசேஷ சவாலை சந்திக்கும். அதனால் கர்ப்ப காலத்தில் தாமிர பானையில் உள்ள தண்ணீரை குடித்தால், தொற்றுகள் மற்றும் நோய்வாய் படாமல் பாதுகாப்போடு இருக்கலாம்.

புற்றுநோய்க்கு எதிராக பாதுகாக்கும்


தாமிரத்தில் சிறப்பான நோய் எதிர்ப்பு குணங்கள் அடங்கியுள்ளது. அதனால் தான் புற்றுநோய் அணுக்கள் வளர விடாமல் அது பாதுகாக்கிறது. மேலும், இயக்க உறுப்புகளால் உடலில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சரி செய்ய இது உதவும்.

வயதாகும் செயல்முறை குறையும்

தாமிரத்தில் உள்ள நோய் எதிர்ப்பு குணங்கள், சருமத்தில் ஏற்படும் சுருக்கங்கள் மற்றும் திட்டுகளைச் சிறப்பாக கையாளும். கூடுதல் அளவிளான தாமிரத்தால், உங்கள் சருமம் மற்றும் முடிக்கு இயற்கையான இரத்த ஓட்டம் கிடைக்கும்.



குழந்தைக்குத் தேவை அப்பாவின் அரவணைப்பு




குழந்தைப் பருவத்தில் அப்பாவின் அரவணைப்பு தவிர அவசியமான வேறு எந்தத் தேவையும் இருப்பதாக என்னால் நினைக்க முடியவில்லை. குழந்தையோடு குழந்தையாக இறங்கி, விளையாடி, தோற்று, அடி வாங்கி, அழுவதுபோல நடித்து, கன்னத்தில் முத்தமிட்டு, தோளில் கட்டிக்கொண்டு பம்பரமாகச் சுற்றும் அப்பாக்களுக்கு மட்டுமே இதயத்தில் இடம். எவ்வளவு பரபரப்பான அப்பாவாக இருந்தாலும் பிள்ளைக்காகச் சொத்து சேர்ப்பதைவிட முக்கியம் அவர்களுடன் செலவிடும் மதிப்புமிக்க நேரம்தான் என்கிறார்கள் மனநல மருத்துவர்கள்.

அப்பாவுடன் இருக்கும்போது குழந்தைகளுக்கு நேர்மறையான சிந்திக்கும் குணம் அதிகரிக்கிறது. மனவளர்ச்சி ஆரோக்கியமாக இருக்கிறது. அதிக தன்னம்பிக்கை பெறுகிறார்கள். சமூகத்துடனான பழக்கமும் வழக்கமும் அதிகரிக்கின்றன. மொழித்திறன் மேம்படுகிறது. படிப்பில் முழுத் திறனையும் வெளிப்படுத்துவார்கள். எந்தப் பிரச்சனையையும் எளிதாக அணுகுவார்கள். குழந்தையின் திறமையை வளர்க்க ஏதேதோ தேடும் அப்பாக்கள் தினமும் ஒரு மணி நேரமாவது ஒதுக்கி அவர்களோடு விளையாட வேண்டும். எல்லாக் குழந்தைகளுமே முழுத் திறமையுடனும், அறிவுடனும்தான் பிறக்கின்றன. ஒரு மின்னல் விழுந்து மலையின் ஊற்றுக்கண் திறப்பது போல, குழந்தைக்களுக்கு இருக்கும் அறிவுக் கண்ணைத் திறக்கும் அதிசய மின்னல் அப்பாக்களின் அன்பில் ஒளிந்திருக்கிறது. தான் சந்திக்கும் விஷயங்களை ஆராய்ந்து, தெளிவுபடுத்திக் கொள்ளும் போக்கை குழந்தைகளிடம் பார்க்க முடியும்.

அப்பாவுடன் விளையாடுவது, விவாதிப்பது என இருவருக்குமான தளம் விரிவடையும்போது மூளையின் செயல்பாடு அதிக அளவில் தூண்டப்படுகிறது. அப்பாவுடன் நேரம் செலவழிக்கும் குழந்தைகளின் திறன் மேம்படுவது உலகளவில் ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. தாயின் பனிக்குடம் தாண்டி உதிக்கும் அந்தத் தாமரையின் சின்னச் சிரிப்பு, செல்லச் சிணுங்கள், மின்னல் கோபம், கொல்லும் அழுகை ஒவ்வொன்றாகப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப அப்பா நடக்கும் போது இருவருக்குமான இன்னொரு தொப்புள் கொடி முடிச்சு போடப்படுகிறது. அது ஆயுள் முழுவதும் அறுக்கப்படுவதில்லை. அம்மாவோடு அப்பாவும் சேர்ந்து வளர்த்த குழந்தைக்கு எவ்வளவு சிக்கலான சூழலையும் தனதாக்கிக் கொள்ளும் வித்தை தெரிந்திருக்கும்.

படிப்பு, விளையாட்டு, உறவு, சமூகம் என எல்லா இடத்திலும் தானாக முன்வந்து பொறுப்புகளை ஏற்றுக் கொள்வார்கள். எது சரி, தவறு என்பதை உணர்ந்து செயல்படும் பக்குவத்தை அவர்களிடம் பார்க்க முடியும். தேடல் வேட்கையுடன் இருப்பார்கள். கோடிக்கணக்கான முகங்களுக்கு மத்தியில் தங்களுக்கான தனி அடையாளத்தை காட்ட எப்போதும் குழந்தைகள் விரும்புவார்கள். அதற்கு அவர்களுக்குத் தேவை அப்பாவின் ஆள்காட்டி விரலைப் பற்றிக் கொண்டு நடக்கின்ற மகிழ்ச்சி.





இயன்ற வழியில் இறைவனை வழிபடலாம்

அன்பே சிவம் என்பது பலரும் அறிந்த ஒன்று. ஆன்புறு சிந்தையராகி அடியவர்கள் இறைவனுக்கு நண்புறுவர் என்பார் திருஞானசம்பந்தர். சீர்மிகு செந்தமிழர் இறைக்கொள்கையான சித்தாந்த சைவம் விதிமுறைகளை வகுத்து வைத்துக் கொண்டு பெருமானை வழிப்படுவதனைக் காட்டிலும் அன்பு வழி நின்று வழிப்படுவதையே சிறந்தது என்று குறிப்பிடுகின்றது. ஒரே நேரத்தில் ஒரே வகையில் வழிப்படும் செயல்முறை என்று அல்லாமல் அவர் அவர் விரும்பும் அவர் அவருக்கு முடிந்த எளிய, சைவ சமயத்திற்கு ஏற்ற முறையில், இறைவனை வழிப்படலாம் என்ற சுதந்திரத்தினைச் சித்தாந்த சைவம் சைவர்கட்கு வழங்கியுள்ளது. இறைவழிபாடு என்பது உயிர் இறைவனிடத்தில் ஓர் உறவினை ஏற்படுத்திக் கொள்ளச் செய்துக் கொள்கின்ற முயற்சி என்பதனை சித்தாந்த சைவம் தெளிவுறுத்துகின்றது.

எனவே, உயிர்களின் அகப்புற ஆற்றலுக்கு ஏற்ப தத்தம் வழிபாடுகளை அமைத்துக் கொள்வதனைச் சித்தாந்த சைவம் தடுப்பதில்லை. இப்பூவுலகில் அன்பு நெறியில் வாழ்ந்து, இறைவனை இவ்வுலகிலேயே கண்டு அவன் திருவடிக்கு ஆளான அருளாளர்களின் வாழ்வியல் நெறிகளைப் பரிந்துரையாகப் பின்பற்றுதற்குச் சித்தாந்த சைவம் முன்வைக்கின்றது. சைவ சமயத்தில் உள்ள நடைமுறை உண்மையை உணராதவர்களே சைவ சமயத்தில் ஒழுங்கு இல்லையென்றும் வழிபாடுகள் ஒருமுகப்படுத்தப்படவில்லை என்றும் அறியாமல் குறிப்பிடுவர்.

இறைவனின் திருவருளைப் பெற்ற, அன்பு நெறியான சிவநெறி என்னும் செந்நெறியில் வாழ்ந்து காட்டிய அடியார்களின் வாழ்வியல் முறைமையைச் சித்தாந்த சைவம் சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்று வகுத்துத் தெளிவுறுத்துகிறது. அடியார்கள் வாழ்ந்து காட்டிய இந்நான்கு நெறிகளில் எது நமக்குப் பின்பற்றுவதற்கு முடியுமோ அதனைத் தெரிவு செய்துக் கொண்டு இறைவனை வழிபட்டு அன்பு பாராட்டலாம் என்று சித்தாந்த சைவம் குறிப்பிடுகின்றது. திருநாளைப் போவார் என்பவர் திருக்கோயிலுக்குச் செல்லும் அன்பர்கள் திருக்குளத்தில் தங்களைத் தூய்மை செய்துக் கொண்டு செல்ல வேண்டும் என்ற பெருவுள்ளத்தோடு திருக்குளம் வெட்டுவதையும் பெருமானுக்குப் பூசனையின் போது இசைக்கருவிகள் முழக்கத்திற்குத் தோற்கருவிகளைச் செய்து கொடுப்பதையும் தமது வழிபாடாகக் கொண்டார். அவர் சார்ந்திருந்த சமுதாயம் அவரைக் குலத்தில் தாழ்ந்தவர் என்று விலக்கி வைத்திருப்பினும் மேற்குலத்தார் என்போர் நலமுற, அன்பு வழியில் நின்று தமக்குத் தெரிந்த தொழிலையே வழிபாடாகக் கொண்டு சிவபணிகள் செய்து பெருமானின் திருவருளுக்கு ஆளானார். முருக நாயனார் என்பவர் தான் அறிந்த தன்னால் இயன்ற, பெருமானுக்கு வழிபாட்டிற்கு மலர்பறித்துக் கொடுத்தல் என்னும் திருச்செயலையே வழிபாடாகக் கொண்டு பெருமானிடத்தில் அன்பினை வளர்த்துப் பெருவாழ்வு பெற்றார்.

துணி வெளுக்கும் தொழிலைச் செய்த திருக்குறிப்புத் தொண்டர் என்பவர் நடமாடும் இறைவனாகக் கருதிய அடியார்களுக்கு அன்போடு துணி வெளுத்துக் கொடுப்பதனைத் தன் சிவப்பணியாக எண்ணினார். அவரால் இயன்ற தனக்கு நன்கு தெரிந்த அச்செயலையே தமது வழிபாடாக, தமது உயர்க்கொள்கையாக எல்லா சூழலிலும் செய்து வந்தார். தம்முடைய அத்தொண்டிற்குத் தடை ஏற்பட்டபோது தமது உயிரையும் விடத்துணிந்தார். அவருக்குப் பெருமான் அவர் துணி வெளுக்கும் பாறையிலேயே வெளிப்பட்டு அருளினான். தங்களுக்குத் தெரிந்த தங்களால் இயன்ற, அடியாருக்கு உடை, உணவு அளித்தல், திருக்கோயிலை கூட்டுதல், கழுவுதல், திருமுறைகள் ஓதுதல், உழவாரப் பணி செய்தல், பெருமானின் திருமஞ்சனத்திற்குச் சந்தனம் அரைத்துக் கொடுத்தல், ஆலயத்தில் விளக்கேற்றுதல், குங்கிலியம் புகைத்தல், திருக்குளத்தில் தூர்வாருதல், தீவத்தி ஏந்துதல், பல்லாக்குச் சுமத்தல், உறைப்பாகச் சமய சின்னங்களை அணிதல், திருவைந்து எழுத்தினை மறவாது கூறுதல் போன்ற செயல்களைச் செய்து இறைவனின் அன்பிற்குத் தங்களை ஆளாக்கிக் கொண்டார்கள். சீலம் எனும் தொண்டு நெறிக்கு உட்பட்ட மேற்கூறிய செயல்களைத் தெரிவு செய்துக் கொண்டு அதிலே உறைப்பாய் நின்று இறைவனை அடைந்தார்கள்.

கண்ணப்பர் எனும் வேடர் தமக்குத் தெரிந்த முறையில் இறைவனுக்குத் திருமஞ்சனமும் திருவமுதும் மலரும் இட்டுத் தமது அன்பின் பெருக்கால் தமது கண்ணையும் பிடுங்கி அப்பி, நோன்பு எனும் நெறியால் பெருமானின் வலப்பக்கத்தில் நிற்கும் பேற்றினைப் பெற்றார். செறிவு முயற்சிகளில் சிறந்து விளங்கிய பெருமிழலைக் குறும்பர் என்பாரும் பூசலார் என்பாரும் அன்றாட வாழ்வில் விட வேண்டுவனவற்றை விடுத்தும் செய்ய வேண்டுவனவற்றைத் தவறாது செய்தும் ஒழுக்கச் சீலராகளாக ஐம்புலன்களையும் மனத்தையும் மூச்சுப் பயிற்சிகளின் வழியும் ஆசனங்கள் வழியும் அடக்கிப் பெருமானை உள்ளத்தில் கண்டும் உள்ளத்தில் கோயில் எழுப்பியும் தங்களால் இயன்ற செறிவு நெறியின் வழி இறைவனைச் சிக்கெனப் பிடித்தார்கள்.

கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிவுற்று அதில் அழுந்தி இருத்தல் என்பதில் கைத்தேர்ந்த கணநாதர் என்பார் திருமுறைகளை ஓதியும் பிறருக்கு ஓதுவித்தும் அதை உணர்ந்தும் பெருமானின் திருவருளில் அறிவு நெறி வழி திளைத்திருந்தார். அடியார் பெருமக்கள் நமக்குக் காட்டிய, நம்மால் இயன்ற ஒரு வழியைத் தெரிவு செய்து கொண்டு முயன்றால் அம்முறை வழியே இறைவன் வந்து அருளுவான் என்பதனை, “அப்பனை நந்தியை ஆரா அமுதினை, ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை, எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால், அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே” என்று திருமூலர் குறிப்பிடுவார். அனைத்து உயிர்களுக்கும் தந்தையாகிய நந்தி எனும் சிவபெருமானை, இறவா வாழ்வினை அளிக்கும் அமுதினைப் போன்றவனை, ஒப்பிலாத பிழைப் பொறுத்து அருளும் வள்ளலை, உலகம் அழிந்து ஒடுங்கும் காலத்து அழிவின்ற நின்று மீண்டும் உலகினைத் தோற்றுவிக்கும் முதல்வனை, அவன்பால் அன்பு மேலிடச் செய்யும் நான்கு நெறிகளில் எந்நெறியினால் ஆயினும் தொழுங்கள். தொழுதால் அந்த வழியின் வகையாலேயே அச்சிவபெருமானும் வந்து அருள்புரிவான் என்கின்றார் திருமூல நாயனார்.

அவர் அதைச் செய்கிறார், இதைச் செய்கிறார் என்று எண்ணி மயங்கி வெறுமனே காலத்தைக் கழிக்காமல் இயன்ற, செயல்படுத்த முடிந்த, சைவ சித்தாந்த கொள்கைக்கு மாறுபடாத, எளிய முறைகளைத் தெரிவு செய்து கொண்டு அந்நெறியிலேயே உறைபாய் நின்று வழிபடுவோமாக!



கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வன்

இறைவன் உறையும் இடம் எது என்று வினவுவோமானால் அவன் திருவருள் பெருகி நிற்கின்ற திருக்கோயில் என்பார்கள். எனவேதான் அதற்கு கோ + இல் என்று பெயர். இறைவனின் திருவருள் விளங்கித் தோன்றும் நிலையமாகத் திருக்கோயில்களைக் குறிப்பிடுவார்கள். திருக்கோயில்களில் உள்ள திருமேனிகளில் மந்திர வடிவில் இறைவனின் திருவருள் உருவேற்றப்பட்டு நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றது. திருக்கோயில்களில் செய்யப்படும் பூசனைகளும் திருவிழாக்களும் இறை உணர்வைத் தூண்டுவனவாக உள்ளன. திருக்கோயில்களில் ஓதப்பெறும் திருமுறைகளும் இறை உணர்வைத் தூண்டுவனவாக உள்ளன. திருக்கோயில்களில் ஓதப்பெறும் திருமுறைகளும் தமிழ் போற்றிகளும் இறைவனின் பெருமைகளையும் திருவருளையும் நினைவூட்டி இறைவனை நினைப்பிக்கின்றன. எனவேதான், "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனவும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் சொல்லிவைத்தார்கள். மூன்று வயதே நிரம்பிய பச்சிளம் குழந்தை திருஞானசம்பந்தர் எண்பத்தொரு வயது நிறைவுற்றிருந்த சிவப்பழமான திருநாவுக்கரசு அடிகளும் திருக்கோயில் திருக்கோயிலாக நெடுந்தூரம் பயணித்து இறைவனை வழிபட்டார்கள். திருக்கூடலை ஆற்றூர் திருக்கோயிலுக்குச் செல்ல சுந்தர மூர்த்தி அடிகள் வழி தெரியாது தடுமாறியபோது பெருமான் வழிப்போக்கனாக வந்து வழிகாட்டியதும் திருமழபாடி எனும் கோயிலுக்குச் சுந்தரர் அடிகள் செல்ல மறந்ததும் பெருமான், "மழபாடியுள் உள்ள என்னை மறந்தனையோ" என்று அவர் கனவில் திருக்கோயிலுக்கு வர அழைத்ததும் திருக்கோயில் வர அழைத்ததும் திருக்கோயில் வழிபாட்டின் முதன்மையையும் இறைவன் அங்கு உறைவதனையும் உணர்த்தும்.

சீர்மிகு செந்தமிழரின் இறைக்கொள்கையான சித்தாந்த சைவம், திருக்கோயில்களில் உறையும் இறைவனை நம் உள்ளத்திலே வைத்து உணர்தல், இறைவனை அடைவதற்கு மேலும் துணை நிற்கும் என்கின்றது. இதனைத் தான் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் கோயில் முழுதும், உயிர்க்கோபுரம் முழுதும் இறைவனைத் தேடிக் காணாமல் இறைவன் தன் உள்ளத்திலே இருப்பதை உணர்ந்து கொண்டேன் என்கின்றார். திருநாவுக்கரசு அடிகளும், "தேடிக் கண்டுக்கொண்டேன் திருமாலொடு நான்முகனும், தேடி தேடொணா தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுக் கொண்டேன்" என்பார். எனவே, திருக்கோயில்களில் உள்ள இறைவனை வழிபட்டு அவ்விறைவனை உள்ளத்தின் உள்ளே உள்வாங்கிக் கொள்ளவேண்டும் என்பது உணர்தலானது. இதனைத்தான், "நாடும் நகரமும் நற்றிருக்கோயிலும், தேடித் திரிந்து சிவப்பெருமான் என்று, பாடுமின் பாடிப்பணிமின் பணிந்தப்பின், கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே" என்கிறார் திருமூலர்.

சித்தாந்த சைவத்தினை விளக்கும் சித்தாந்த சைவ மெய்கண்ட நூல்கள் பதிநான்கின் தலைமணி நூலாக விளங்கும் சிவஞானபோதம், "ஆலயம் தானும் அரனெனத் தொழுமே" என்கின்றது. ஆலயத்தில் உள்ள திருமேனியையும் ஆலயத்தையும் இறைவனாகவே தொழவேண்டும் என்கின்றது. அதன்படி திருமந்திரமும் சைவ நெறியில் நிற்போர் திருக்கோயில்கள் உள்ள திருநகரங்களையும் அவற்றில் உள்ள திருக்கோயில்களையும் தேடித்திரிந்து மிகுந்த உண்மையான அன்போடு பலனை எதிர்பார்த்து வழிபடும் வஞ்சக வழிபாட்டினை விடுத்து எப்பொழுதும் தவறாது வழிபடுபவர் என்கிறது. சிவபெருமானே என்று திருக்கோயிலில் உள்ள திருமேனியைச் சிவபெருமானாகவே எண்ணியும் தங்கள் சிறுமையை எண்ணி வறுந்தியும் பெருமானின் பெருமையை எண்ணி போற்றிப் புகழ்ந்தும் பணிவர் என்கிறது. அவ்வாறு உள்ளம் உருகி வழிபடுகின்ற அன்பர்களுக்குத் திருக்கோயில்களில் திருமேனியாக இருக்கின்ற பெருமான் அவ்வன்பர்களின் கூடிய நல்லுள்ளங்களைக் கோயிலாக் கொண்டு வீற்றிருப்பான் என்கின்றது.

புறத்திலே திருக்கோயில்களிலும் இல்லப் பூசனை அறைகளிலும் உள்ள இறைவனை உள்ளத்திலே இருக்கச் செய்வதே வழிபாட்டின் உயர்ந்த நோக்கம். புறத்திலே உள்ள இறைவனை உள்ளத்திலே அமர்த்த வேண்டும். இறைவனை உள்ளத்திலே இருத்துதற்குத் திருமூலர் குறிப்பிடும் கூடிய நெஞ்சம் அமைய என்ன செய்ய வேண்டும் என்பதனைத் திருநாவுக்கரசு அடிகள் தெளிவாக இயம்புகினறார். "மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப் பெய்மையாம் களையை வாங்கி பெறையெனும் நீறைப் பாய்ச்சித் தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச் செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையும் அன்றே" என்று தெளிவுறுத்துவார்.

இறைவனை உள்ளத்திலே இருத்த வேண்டுமானால் புறத்திலே செய்யக்கூடிய திருக்கோயிலைக் கூட்டுதல், மெழுக்கிடுதலம், பல்லாக்குச் சுமத்தல், மலர் பறித்துக் கொடுத்தல், திருமஞ்சனத்திற்கு நீர் எடுத்துக் கொடுத்தல் போன்ற சிவப்பணிகளையும் புறத்திலும் அகத்திலும் இறைவனை எண்ணிப் பூசனை செய்தல், ஆலய வழிபாடு செய்தல் போன்றவற்றைத் தொடர்ந்து இடைவிடாது செய்து, பெருமானை மனத்தில் வைத்து இடைவிடாத எண்ணுதல்,



சமய நூல்களைக் கற்றல், கேட்டல், கேட்டவற்றைச் சிந்தித்தல், சிந்தித்துத் தெளிந்தவற்றை வாழ்வில் பின்பற்றுதல் என்ற சீல, நோன்பு, செறிவு, அறிவு என்பவற்றால் மனதை ஆழமாக உழவேண்டும் என்கின்றார்.

இவ்வாறு தொடர்ந்து செய்வதனால் அப்பெருமானிடத்தில் அன்பு என்கின்ற விதையினை உள்ளத்தில் விதைக்க இயலும் என்கின்றார் திருநாவுக்கரசு அடிகள். பெருமானிடத்தில் உண்மையான அன்பு ஏற்படுதலினால் உள்ளத்தில் மண்டிக்கிடக்கின்ற களைகளை அகற்ற இயலும் என்கின்றார். உயிருக்கு நன்மை பயக்க மூடிய நற்சிந்தனைகளை உண்மை என்றும் உள்ளத்தில் உணர்ந்தவற்றையே வெளியே கூறுவது வாய்மை என்றும் எண்ணத்தில் உணர்ந்தவற்றையே வெளியே செய்தலை மெய்மை என்றும் குறிப்பிடுவர். உண்மை, வாய்மை, மெய்மை என்ற மூன்றனுக்கு மாறானவையே உள்ளத்தில் உள்ள களைகள். இறைவன் உள்ளத்தில் அமர இவற்றினைக் களைந்து எறிய வேண்டும் என்கின்றார் திருநாவுக்கரசு அடிகள்.


“கண், காது, மூக்கு, வாய், மெய், என்பன இழுத்த இழுபிற்குச் செல்லாமல் அவற்றைக் கட்டுப்படுத்தி நன்னெறிக்கு மடைமாற்றம் செய்தலே ஐம்புலனடக்கம். பணிவும் அடக்கமும் பொறுமை எனப்படும்.”

சிவன் என பயிர் உள்ளத்திலே நிலைத்து வளர வேண்டுமானால் பொறை எனும் நீரைப் பாய்ச்ச வெண்டும் என்கின்றார். பொறை என்றால் பொறுமை என்று பொருள். பொறுமையோடு அமைதியாய் மேற்கூறியவற்றை வாழ்வில் கடைப்படித்து வந்தால் நம்மை நாமே சரி செய்துக்கொள்ளும் செவ்வியாகிய தன்மையும் நோக்கிக் கண்டால் எனும் செவ்வியும் உண்டாகும் என்கின்றார். மேற்கூறியவற்றால் உயிர்களுக்கு கொல்லாமை, ஐம்புலன்களை அடக்கல், பொறுமை, இரக்கம், தவம், அன்பு என்பவன தோன்றும். புலால், மது பேன்றவை மட்டுமல்லாது மனத்தால், வாக்கால், காயத்தால் பிறரைத் துன்புறுத்தாமல் இருப்பதே கொல்லாமை. கண், காது, மூக்கு, வாய், மெய், என்பன இழுத்த இழுபிற்குச் செல்லாமல் அவற்றைக் கட்டுப்படுத்தி நன்னெறிக்கு மடைமாற்றம் செய்தலே ஐம்புலனடக்கம். பணிவும் அடக்கமும் பொறுமை எனப்படும். துன்பத்தைக் கண்டு துவளாமை, பிறருக்குத் துன்பம் செய்யாமையே தவம் எனப்படுகிறது. அன்புடையோராய்த் திகழ்வது அன்பு. இவற்றினை உள் வாங்கிக் கொண்டு வாழ்தலே மனத்தில் மாசு நீங்கி வாழ்தல். இத்தகைய உள்ளத்திலேயே இறைவன் குடிக்கொள்கின்றான். இதுவே கூடிய நெஞ்சம் என்பார் திருநாவுக்கரசு அடிகள்.

தொடர்ந்து, பெருமானை உள்ளத்திலே நிலை நிறுத்த சிவச்சின்னங்கள் அணிய வேண்டும் என்கின்றார். “நமசிவய” எனும் திருவைந்து எழுத்து, உருத்திராக்கம் எனும் திருஅடையாள மாலை அல்லது கண்டிகை, திருநீறு, சிவ வேடம் போன்றவை உள்ளத்தில் மாசு படிவதனைக் காக்கும் வேலியாகவும் உள்ளத்தில் வளர்கின்ற சிவப்பயிரினைப் பாதுகாக்கும் வேலையாகவும் அமையும் என்கின்றார். இவ்வாறு செம்பொருளைச் செம்மையாகப் பற்றி வாழ்வோமேயானால் சிவபெருமான் நம் உள்ளத்தில் விற்றிருப்பான் என்கின்றார் திருநாவுக்கரசர். இத்தகைய நெஞ்சத்தினையே கூடிய நெஞ்சமென்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இறைவனைப் புறத்தில் காண்பதோடு நின்றுவிடாமல் அவனை அகத்தில் குடியேற்றும் வழியினைப் பற்றியும் சிந்தித்தும் அதற்கு உறியனவற்றை நடைமுறைப்படுத்தி இறைவன் நம் உள்ளத்தில் வீற்றிருக்க வாழ்வாங்கு வாழ்வோமாக!



உங்களால் முடியும்



முடியாதது என்பது இந்த உலகத்தில் எதுவுமே இல்லை. விஞ்ஞானம் முன்பு முடியாதது என்று நினைத்ததை இன்று நடத்திக் காட்டவில்லையா? இந்த விஞ்ஞானத்தை கண்டுபிடித்தவனும் இதை இந்த நிலைக்கு வளர்ச்சி அடையச் செய்தவனும் மனிதன்தானே! அவன் வேறு எந்த கிரகத்தில் இருந்தும் வந்து விடவில்லையே? நீங்களும் இந்த மனிதக் கூட்டத்தில் ஒருவர் தானே! அந்த சில மனிதர்களால் முடியும் பொழுது நீங்களும் ஏன் முயற்சி செய்யக்கூடாது.

"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் சொல் எனும் சொல்"

இவனைப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தாரோ என்று ஒவ்வொரு பெற்றோர்களுக்கும் பெருமை சேர்க்க முடியும் தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் இருந்தால் கண்டிப்பாக வெற்றி பெற முடியும்.

"எடுத்த காரியம் அனைத்திலும் நீங்கள் வெற்றி அடைந்து வருகிறார் போல ஒரு படத்தை தெளிவாக கற்பனை செய்து, உங்கள் மனத்திரையில் அழிக்க முடியாதபடி பதித்துக் கொள்ளுங்கள். அந்த படத்தை சிறிதும் மங்கிப்போக அனுமதிக்காதீர்கள், அதில் முழு நம்பிக்கையோடு இருங்கள். உங்கள் மனம் அதை தானாகவே நிஜமாக்கித் தரும். தோல்வி அடையக் கூடும் என்று ஒரு போதும் நினைக்காதீர்கள். அது ஆபத்து ஏனெனில் அந்த நினைப்பை செயலாக்க மனம் முயற்சி செய்ய ஆரம்பித்துவிடும். எப்போதும் வெற்றியைப் பற்றியே நினையுங்கள்," என்று நார்மன் வின்சென்ட்பில் கூறுகிறார்.

"தோன்றின் புகழோடு தோன்றுக அ·திலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

எவ்வளவு உண்மையான கருத்து. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வள்ளுவன் சொன்னது. பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்று இல்லாமல் ஏதாவது ஒரு சாதனை செய்ய வேண்டும். எந்த துறையிலாவது சாதனையாளர் ஆவதற்கு கடும் உழைப்பும், முயற்சியும், தன்னம்பிக்கையும் வேண்டும்.

எண்ணம் தான் எல்லாவற்றிற்கும் ஆணிவேர். எண்ணம் வலிமை மிக்கது. எண்ணம் மகத்தான சக்தி கொண்டது. மகத்தான சாதனைகளைப் புரிய வல்லது. "எண்ணங்களை உள்ளே விடுங்கள் முடியும் என்ற எண்ணங்களை திரும்பத் திரும்ப உள்ளே விடுவதன் மூலம் மனத்தில் நம்பிக்கை பிறக்கிறது. நமது நம்பிக்கையைத் திரும்பத் திரும்ப சிந்திக்கும் போது அது செயலாகப் பரிணமிக்கிறது. திரும்ப திரும்பச் செய்யும் ஒரு செயல் பழக்கமாகிறது. பல பழக்கங்கள் ஒரு மனிதனின் குணநலன்கள் ஆகின்றன", என்று தத்துவ ஞானியான எரைன் கூறுகிறார். எண்ணம், நம்பிக்கை, செயல், பழக்கம், மனித குணநலன் எண்ணம் நம்பிக்கையாய் நம்பிக்கை செயலாய் செயல் பழக்கமாய் பழக்கம் குண நலனாய் மாறுகிறது. முடியும் என்ற எண்ணம் கொண்ட ஒரு மனிதன் நாளடைவில் சாதனைகள் நிறைந்த பெரு மனிதனாய் மலர்கிறான்.

பறவைகள் போல நாம் பறக்க முடியாது. ஏனென்றால் அந்த அளவு தன்னம்பிக்கை கிடையாது. வாழ்க்கையில் நம்பிக்கையே நமக்கு இறக்கை போல இருந்து மேலே தூக்கிவிட முடியும். இது சிறு வயதினர் முதல் வயதானவர்கள் வரைக்கும் பொருந்தும். பயம், கோபம், பொறாமை, குற்ற உணர்வு, கவலை இவற்றைக் கீழ் உணர்ச்சிகள் என்று கூறுகிறார்கள். இந்தக் கீழ் உணர்வுகள் மனிதனது சிந்திக்கும் திறனை, சிந்திக்கும் அமைப்பை முடக்கி விடுகிறது என்று கூறுகிறார்கள் மன நல மருத்துவர்கள். முடக்கப்பட்ட மனம் செயலற்று போகிறது. முடக்கப்படுவது மட்டுமல்ல, நமக்கு நல்ல யோசனைகளையும் நம்பிக்கையையும் கொண்டு தந்து உதவக்கூடிய பெரு மனத்தின் வாயில் கதவை இவை சாத்திவிடுகின்றன.

மனம் ஒன்றினால் செயல் பிறக்கும்

"இந்த பள்ளியினால் முடியாததை ஜப்பான் செய்து முடித்து விடாது. ஜப்பானால் செய்து முடிக்க முடியாததை இந்த உலகம் செய்து முடிக்காததை இந்த உலகம் செய்து முடிக்காது." எவ்வளவு தன்னம்பிக்கையான வார்த்தைகள். இது வெளிநாட்டில் ஒரு பள்ளியில் இருக்கும் அறிவிப்பாகும். 10ம், 12-ம், வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியானவுடன் அதிக மதிப்பெண் எடுத்தவர்களின் புகைப்படம் தொலைக்காட்சியிலும் நாளிதழ்களிலும் காணும் பொழுது எவ்வளவு சந்தோசமாக உள்ளது.

ஏன் உங்களால் முடியாது?

இந்த கேள்வியை உங்களிடமே நீங்கள் கேட்டுக்கொண்டே இருந்தால் உங்களாலும் எல்லோரும் போற்றும்படி வளரமுடியும். இன்று வயதானவர்கள் கூட எத்தனை பேர் எத்தனை தொழிலில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கும் பொழுது ஆச்சர்யமாக இருக்கும். தள்ளாத வயதிலும் அவர்கள் உடலால் உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இளரத்தம் உள்ள நீங்கள் ஏன் மனதால் உழைக்கக்கூடாது.

உங்களுக்கு என்ன குறை இக்காலத்தில்? சாதாரண தொழிலாளி முதல் எல்லோரும் குழந்தைகளை நன்றாக படிக்க வைக்கிறார்கள். அதற்காக அவர்கள் எந்தத் துன்பத்தையும் அனுபவிக்க தயாராக இருக்கிறார்கள். காரணம் அவர்கள் பட்ட, படும் துன்பங்களை நீங்கள் அனுபவிக்காமல் இருக்க வேண்டும் என்பதே இன்றைய காலத்தில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கிறார்கள். ஆகவே, மாணவ, மாணவிகளே படித்து முன்னேறுவது உங்கள் கடமையாகும்.


தஞ்சாவூர் பெருவுடையார் கோயில்

தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலுக்குச் சிறப்பு அம்சங்கள் பல உண்டு. இரண்டு அல்லது மூன்று தளங்களை மட்டுமே கொண்டு கோயில்கள் கட்டப்பட்டு வந்த காலத்தில், கற்களே கிடைக்காத காவிரி சமவெளிப் பகுதியில், 15 தளங்கள் கொண்ட சுமார் 60 மீட்டர் உயரமான ஒரு கற்கோயிலை எழுப்பியது என்பது மாபெரும் சாதனையே. அது மட்டுமின்றி, கல்வெட்டுகள், சிற்பங்கள், ஓவியங்கள், வழிப்பாட்டுக்கான செப்புத் திருமேனிகள் என்று பல புதிய அம்சங்களையும் இத்திருக்கோயிலில் புகுத்தி கோயில் கட்டும் கலையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவன் ராஜராஜன்.



தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலுக்குச் சிறப்பு அம்சங்கள் பல உண்டு. இரண்டு அல்லது மூன்று தளங்களை மட்டுமே கொண்டு கோயில்கள் கட்டப்பட்டு வந்த காலத்தில், கற்களே கிடைக்காத காவிரி சமவெளிப் பகுதியில், 15 தளங்கள் கொண்ட சுமார் 60 மீட்டர் உயரமான ஒரு கற்கோயிலை எழுப்பியது என்பது மாபெரும் சாதனையே. அது மட்டுமின்றி, கல்வெட்டுகள், சிற்பங்கள், ஓவியங்கள், வழிப்பாட்டுக்கான செப்புத் திருமேனிகள் என்று பல புதிய அம்சங்களையும் இத்திருக்கோயிலில் புகுத்தி கோயில் கட்டும் கலையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவன் ராஜராஜன்.

தஞ்சாவூர் பெரிய கோயிலைப் பற்றி பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆயினும் இவற்றில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. கோபுரத்தின் உயரம் 59.75 மீட்டர் முதல் 65.85 மீட்டர் வரை குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, சோழர் கால அளவுகளின்படி கோயிலின் திட்டமிடப்பட்ட உயரம் என்ன; கடைக்கால்கள் எந்த அடிப்படையில் திட்டமிடப்பட்டன; கட்டப்பட்டன; பாரந்துாக்கிகள் முதலியன இல்லாத ஒரு காலத்தில் சுமார் 60 மீட்டர் உயர கோபுரம் எவ்வாறு கட்டப்பட்டது? இந்தக் கேள்விகளுக்கு விடைபெற நாம் ராஜ ராஜன் காலத்தில் கையாளப்பட்ட அளவு முறைகளைப் பற்றிச் சற்று தெரிந்துக் கொள்வது அவசியம்.



பெரிய கோயில் அளவுகோல்

எட்டு நெல் கதிர்களை அகலவாட்டில் ஒன்றோடொன்று நெருக்கமாக அமைத்து அந்த நீளத்தை விரல், மானங்குலம், மானம் என்று அழைத்தனர். இருபத்து நான்கு விரல் தஞ்சை முழம் என்று அழைக்கப்பட்டது. ஒரு முழுமே இருவிரல் நீட்டித்து பதினாறு விரல் அகலத்து, ஆறுவிரல் உசரத்து பீடம், ஒரு விரலோடு ஒரு தோரை உசரத்து பதுமம் என்ற திருமேனி பற்றிய குறிப்பை காணலாம்.

தற்போதைய அளவின்படி ஒரு விரல் என்பது 33 மில்லி மீட்டராகும். கருவறை வெளிச்சுவர்களில் காணப்படும் கலசத்துாண்களில் அகலம் 10 விரல்களாகும், அதாவது 0.33 மீட்டர் ஆகும். இதுவே, தஞ்சாவூர் பெரிய கோயிலின் அடிப்படை அளவாகும். இதனை நாம் அலகு என்று குறிப்படலாம். இந்த அடிப்படையில் விமானத்தின் திட்டமிட்ட உயரம் 180 அலகுகள். அதாவது சுமாராக 59.40 மீட்டர். இதைப்போன்று 15 மடங்கு உயரமான 180 அலகுகள், அதாவது 59.40 மீட்டர் என்பதே கோபுரத்தின் திட்டமிடப்பட்ட உயரம். கருவறையின் இரு தளங்களிலும் விமானத்தின் பதின்மூன்று மாடிகளும் சேர்ந்து 15 தளங்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அலகுகளின் அடிப்படையில் கருவறை 24 அலகுகள் கொண்ட ஒரு சதுரம். கருவறையின் உட்சுவரும், வெளிச்சுவரும் முறையே 48 அலகுகள், 72 அலகுகள் அளவுடைய சதுரங்களாகும். பிராகாரத்தில் நாம் காணக்கூடிய விமானத்தின் அடிப்பகுதி 90 அலகுகள். இந்த அடிப்படையில் விமானத்தின் கடைக்கால் 108 அலகுகள் (36 மீட்டர்) பக்க அளவு கொண்ட பெரிய சதுரமாக இருக்கலாம் என யூகிக்க முடிகிறது. சரியான அளவுகள் தெரியவில்லை.

இந்த கடைக்கால் மிகக்குறைந்த ஆழத்திலேயே, அதாவது 5 அலகுகள் ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ளது என தெரியவந்துள்ளது. கோயில் வளாகத்தின் அருகே பாறைத் தென்படுகிறது. ஆயினும், சுமார் 42,500 டன் எடையுள்ள விமானத்தை பாறையின் தாங்குத் திறனைச் சோதித்துப் பார்க்காமல் கட்டியிருக்க மாட்டார்கள் என்று தோன்றுகிறது. சுமார் 1.2 மீட்டர் சதுரத்தில் 0.6 மீட்டர், 0.6 மீட்டர், 0.6 மீட்டர் அளவு கற்களை ஒவ்வொரு அடுக்கிலும் நான்கு கற்கள் என்ற கணக்கில் அடுக்கிக் கொண்டே போய் பாறையில் எப்போது விரிசல்கள் விழுகின்றன என்பதைக் கவனித்த பின்னரே கடைக்காலின் அளவுகள் தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாறையின் மேல் வரும் அழுத்தம் குறித்த சோதனைகள் இக்கோயில் நிர்மாணித்த சிற்பிகள் மேற்கொண்டனர் என்பது இக்கோயிலின் மற்றொரு சிறப்பம்சமாகும்.

பெரிய கோயிலின் விமான வடிவமைப்பு

180 அலகுகள் உயரம் கொண்ட கோயில் விமானம் எவ்வாறு கட்டப்பட்டது என்பது குறித்த குறிப்புகள் எதுவுமில்லை. சில சாத்தியக் கூறுகள் மட்டுமே பரிசீலிக்கலாம். கருவறையின் உட்சுவருக்கும், வெளிச்சுவருக்கும் இடையே 6 அலகுகள் கொண்ட உள் சுற்றுப்பாதை உள்ளது. இந்த இடைவெளி படிப்படியாகக் குறைக்கப்பட்டு, சுமார் 20 மீட்டர் உயரத்தில் இருசுவர்களும் இணைக்கப்பட்டன. இங்கிருந்து விமானம் மேலே எழும்புகிறது, சுவர்களை இணைத்ததன் மூலம் 72 அலகுகள் பக்க அளவு கொண்ட (சுமார் 24 மீட்டர், 24 மீட்டர்) ஒரு பெரிய சதுர மேடை கிடைக்கப் பெற்றது. விமானம் 13 தட்டுகளைக் கொண்டது. முதல் மாடியின் உயரம் சுமார் 4.40 மீட்டர், பதின் மூன்றாவது மாடியின் மேல் எண்பட்டை வடிவ தண்டு, கோளம், கலசம் மூன்றும் உள்ளன. இதன் மொத்த உயரம் 30 அலகுகள்.

அதாவது பிராகரத்திலிருந்து விமானத்தின் 13-ஆவது மாடி சரியாக 150 அலகுகள் (50மீட்டர்) உயரத்தில் உள்ளது. தஞ்சை சிற்பிகள் இந்த உயரத்தை மூன்று சம உயரப் பகுதிகளாகப் பிரித்துள்ளனர். அதாவது, கருவறை மேல் மாடி உயரம் 50 அலகுகள், விமானத்தின் முதல் மாடியிலிருந்து 5ஆவது மாடி வரை 50 அலகுகள், விமானத்தின் 6-வது மாடியிலிருந்து 13-ஆவது தளம் வரை 50 அலகுகள். இந்த மூன்று பகுதிகளுக்கும் அதன் உயரத்துக்குக்கேற்ப தனிதனியான சார அமைப்புகள் அமைக்கத் திட்டமிட்டிருந்தனர் என்று தெரிகிறது.



மலேசியாவில் பொருள் சேவை வரி பிற்போக்குத்தனமானதா?

ஒரு பரந்த அடிப்படை வரியான பொருள் சேவை வரி பொதுவாக ஒரு பிற்போக்கான வரி என கருதப்படுகிறது. மேலும், இதை உள்நோக்குவதற்கு முன்னே, முதலில் பிற்போக்கு என்றால் என்ன என்பதை நாம் தெரிந்துக்கொள்வோம். சுருங்கச் சொன்னால், பிற்போக்கான வரி செல்வந்தர்களை விட சாதாரண ஏழைக்கு அதிக சுமையை கொடுக்கிறது. வரியின் விகிதமும் அதை செலுத்துபவருக்கும் உள்ள தொடர்பு, அவரின் சொத்துடைமை, செலவுகள் மற்றும் வருமானம் ஆகியவை நிர்ணயம் செய்கின்றது. செலவு வரிகளில் அடங்கும் பொருள் சேவை வரியும் பிறபோக்கு வரியாக கருதப்படுகிறது. இதற்கு காரணம், உயர் வருவாய் பெறும் செல்வந்தர்களை விட ஏழை மக்கள் தங்கள் வருமானத்தை அதிகளவில் செலவிடுகின்றனர். கொள்கை வகுப்பாளர்கள் பிற்போக்குத்தன வரி இயல்பான பிரச்சனை என்றாலும், அவர்கள் இதில் தீவிர கவனம் செலுத்துவது அவசியம் என்று கருதுகின்றனர். பிற்போக்கு தன்மை கொண்ட வரியாக இருந்தாலும் 160 நாடுகளில் GST அல்லது VAT (Value Added Tax) என்ற பெயரில் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிற நாடுகளில் அனுபவம்

பிற்போக்கு வரியின் அனுபவத்தை பல வருடங்களாக வளர்ச்சியடைந்த நாடுகளான யுனைதெட் கிங்டம், ஆஸ்திரேலியா, ஜெர்மனி மற்றும் ஸ்பெயின் அதன் ஏழை நடுத்தர மற்றும் உயர் வருவாய் பெரும் மக்களிடையே கண்டுள்ளது. VAT நடைமுறை படுத்தும் பொழுது, இந்த நாடுகள் அடிப்படை மற்றும் பொருட்களுக்கு மிகக் குறைவான அல்லது பூஜியம் விகிதத்தை அமல்படுத்தியதன் காரணமாகும். எடுத்துக்காட்டாக, ஆஸ்திரேலியாவில் VAT அல்லது முறைமுக வரியின் தாக்கம் என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில், ஜப்பான், கொலம்பியா, பேரு போன்ற நாடுகளிலும் VAT பிற்போக்கானது மற்றும் கட்டண விலக்குகளில் சிறிய தாக்கம் மட்டுமே என்ற முடிவுகளே பெறப்பட்டன.

மறுபக்கமோ வளர்ந்து வரும் நாடுகளான வியட்னாம் மற்றும் எத்தியோப்பியா போன்ற நாடுகள் முற்போக்கான VAT அனுபவம் செய்து வருகின்றன. காரணம், VAT அமலாக்கத்தின் போது அடிப்படை பொருட்களுக்கு வரி விலக்கு செய்யப்பட்டது. கட்டண விலக்கு (குறிப்பாக உள் நாட்டு செலவுகள்) காரணமாக பாகிஸ்தானும் முற்போக்கான VAT அனுபவிக்கிறது.

மலேசியாவில் GST பிற்போக்குத்தனமானதா?

குறைந்த வருமானம் பெறுவோருக்கு வரி கட்டுதல் பெரும் சுமையாகும் என்பதால் GST-யின் அறிமுகம் பிறபோக்கானது எனும் கவலைக்கிடம் எழுகிறது. "VAT" மற்றும் GST ஒரு பரந்த அடிப்படையிலான செலவு வரி என்பதால் அது பிற்போக்கானது என்று கருதப்படுகின்றது. இருப்பினும், இக்கூறு ஒரு பெரும் பொருட்டாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. உண்மையில், ஆராய்ந்தால்,வளர்ந்தது வரும் நாடுகளில் குறைந்த வருமானம் பெறுவோர் வாங்கும் பெரும்பாலான பொருட்களுக்கு அவர்கள் வரி செலுத்துவதில்லை. இந்த விடயத்தை கவனத்தில் கொள்வோமானால், VAT இயல்பாகவே முற்போக்கானது என்பது புலப்படும். மலேசியாவில், நடப்பில் இருக்கும் பிற்போக்கான வரிகளுக்கு சமமமான (அல்லது கூடுதலாக) GST வரி அமல்படுத்தப்படவிருப்பதால், இதனை ஒதுக்கிவிடக்கூடாது.

அதோடு, வளர்ந்து வரும் நாடுகள் அதன் சொத்துடைமை பொருத்து பல தரப்பட்ட GST விகிதங்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால் அதன் சமூக பாதுகாப்பு பொதுவாக உயர் வருமானம் பெரும் நாடுகளைப் போன்று இல்லை என்றே கூறலாம். அத்தியாவசிய பொருட்கள் அதாவது உணவு பொருட்கள், குழாய் தண்ணீர், முதல் 300 யுனிட் மின்சார வசதி ஆகியவை மலேசிய GST-யில் பூஜியம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஏழை மக்களின் மீதான GST தாக்கத்தை குறைக்க, உடல் நலம், வீட்டு வசதி, பொதுப்போக்குவரத்து, கல்வி போன்ற சேவைகளுக்கு GST விலக்கப்பட்டுள்ளது. தவிர, GST தொடக்கநிலையின் வழி, சிறு தொழிலில் ஈடுபட்டுள்ளோர் GST-யின் கீழ் பதிந்துக் கொண்டு கணக்கறிக்கையை சமர்ப்பிக்கத் தேவையில்லை. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு GST சுமையை ஓரளவுக்கு குறைக்க முற்பட்டுள்ளது. அதாவது, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் கிராமப்புறங்களில் அல்லது சில்லறை வணிகர்களிடமிருந்து பொருட்கள் அல்லது சேவைகளை பெறும் பொழுது அதற்கு வரி விதிக்கப்படுவதில்லை அல்லது சிறிய அளவில் மட்டுமே வரி இருக்கும். அதே சமயம், நகர்ப் புறங்களில் வாழும் அதிக வருமானம் பெரும் குடும்பங்கள் பேரங்காடிகளில் பொருட்கள் மற்றும் சேவைகள் பெறும் பொழுது அவர்கள் இந்த GST வரி கண்டிப்பாக செலுத்தவர். இதன் வழி அதிக வருவாய் பெரும் குடும்பங்கள் குறைந்த வருவாய் பெரும் குடும்பங்களை விட அதிகமாக GST சுமையை நுகர்வர்.

சமீப காலமாக, மலேசியாவில் அமல்படுத்தப்பட்டுள்ள பொருள் சேவை வரி (GST) பிற்போக்குத்தனமானது என விமர்சித்து பல கட்டுரைகள் வெளி வந்த வண்ணம் உள்ளன. குறிப்பாக சில விமர்சனங்கள், செல்வந்தர்களைவிட ஏழைகளுக்கே அதிக வரி விதிக்கப்படும் என்கின்றனர். மேலும், RM2000திற்கும் குறைவாக வருமானம் பெரும் ஒருவர் பொருள் சேவை வரியை செலுத்தத் தொடங்கும் பொழுது, அது அவருடைய வீட்டு செலவுகளை மேலும் அதிகரிக்கச் செய்வதோடு வரும் 2014 ஆண்டில் உள்நாட்டு உற்பத்தியும் சரியும் என்ற எண்ணமும் எழுகிறது. இது சாத்தியமா? இக்கட்டுரைகள், பொருள் சேவை வரி அறிமுகப்படுத்தப்படும் போது SST ஒழிக்கப்பட உள்ளது என்பதை ஏன் விமர்சிக்க மறுக்கின்றன? பொருள் மற்றும் சேவை வரியை பிறபோக்குத்தனமானது என்று கூறும் சில விமர்சனங்கள் பல்வேறு வருமானம் பெறுவோரின் செலவின மாதிரியை ஆய்வு செய்ய தவறிவிட்டனர்.



ஏன் மலேசிய பொருள் சேவை வரி முற்போக்குத்தனமானது?



மலேசிய சுங்கத்துறை மற்றும் நிதி அமைச்சும் இணைந்து பொருள் சேவை வரியை பற்றிய மேலும் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளன. சமீப காலமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் மலேசிய பொருள் சேவை வரி மாதிரி முற்போக்கானதே என்று கூறுகிறது.

TAX INCIDENCE

EXPENDITURE	INCOME RM2,000	TAX INCIDENCE at GST 6%
Expenditure On Zero-Rated Items	RM640.00	-
Expenditure On Exempt Items	RM707.40	12.73
Expenditures Subject To GST	RM652.60	39.16
Total		51.89
Total Expenditure	RM2,000.00	
Tax Burden As % To Expenditure		2.59%

EXPENDITURE	INCOME RM12,000	TAX INCIDENCE at GST 6%
Expenditure On Zero-Rated Items	RM1,093.86	-
Expenditure On Exempt Items	RM2,155.08	27.59
Expenditures Subject To GST	RM5,751.06	345.06
Total		372.65
Total Expenditure	RM9,000.00	
Tax Burden As % To Expenditure		4.14%

Analysis of Consumption based on Household Expenditure Survey 2009/2010

செலவுகளுக்கான வரி சுமையை விழுக்காடு அடிப்படையில் நோக்கும் போது, RM2000 வீட்டு வருமானம் பெரும் குடும்பத்தின் வரி சுமை 2.59 விழுக்காடு என்பதை மேலுள்ள அட்டவணை தகவல்கள் புலப்படுத்துகின்றன. ஆனால், RM12000 பெரும் வீட்டு வருமானத்தின் வரி சுமையோ4.14 விழுக்காடு ஆகும். மாதத்திற்கு RM2000 விட்டு வருமானம் பெருவோர், 6 விழுக்காடு பொருள் சேவை வரி விதிக்கப்பட்ட பொருட்களுக்க RM39.16 ஒரு மாதத்திற்கு செலவிடுகின்றனர். ஆனால், RM12000 பெரும் வீட்டு வருமானத்தினரோ மாதத்திற்கு RM345.06 இப்பொருட்களுக்கு செலவிடுகின்றனர். இது 9 மடங்கு கூடுதலாகும். பொருள் வரி மற்றும் சேவை வரிக்கு விலக்கு தருவதன் மூலம் தற்பொழுதுசெலுத்தப்படும் இவ்வரிகளின் தொகையை மேலும் குறைக்கலாம். RM2000 பெரும் விட்டு வருமானத்தினர், மொத்த செலவின் 32 விழுக்காடு பூஜிய மதிப்பிலான பொருட்களுக்கும் 32.63 விழுக்காடு பொருள் சேவை வரி விதிக்கப்பட்ட பொருட்களுக்கும் செலவிடுகின்றனர். மாறாக, RM12000 பெரும் வீட்டு வருமானத்தினர் மொத்த செலவின் 12.15 விழுக்காடு பூஜிய மதிப்பிலான பொருட்களுக்கும் 63.90 விழுக்காடு பொருள் சேவை வரி விதிக்கப்பட்ட பொருட்களுக்கும் செலவிடுகின்றனர்.

பொருள் சேவை வரி ஒரு நுகர்வு வரியாகும். இது செலவுகளை சார்ந்தே அமையும். செலவுகள் கூடினால், வரியும் கூடும். குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுவோர் அத்தியாவசியமற்ற பொருட்களான பூஜியமதிப்பிலான பொருட்களுக்கோ அல்லது பொருள் சேவை வரி விலக்கு அளிக்கப்பட்ட பொருட்களுக்கோ வீண் செலவு செய்யமாட்டார்கள். ஒருகால் அவர்கள் அப்பொருட்களுக்காக செலவு செய்தாலும் அவர்களின் வாங்கும் சக்தி செல்வந்தவர்களை விட மிக குறைவாகவே இருக்கும். பொதுவாக, செல்வந்தர்களே ஆடம்பரத்திற்காக செலவழிப்பர்.

வளர்ந்தது வரும் நாடுகளில் குறைந்த வருமானம் பெறுவோர் வாங்கும் பெரும்பாலான பொருட்களுக்கு அவர்கள் வரி செலுத்துவதில்லை. இந்த விடயத்தை கவனத்தில் கொள்வோமானால், VAT இயல்பாகவே முற்போக்கானது என்பது புலப்படும்.





பொருள் சேவை வரியில் பல குறைகள் இருப்பின், மலேசிய பொருள் சேவை வரி மாதிரி முற்போக்குதன்மை உடையதாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், மக்களுக்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்தாமல் SST-ன் இயல்பான பலவீனங்களை கலைகிறது. மலேசிய பொருள் சேவை வரி மாதிரி முற்போக்குதன்மை உடையதாகவே இருந்தாலும், பொருள் சேவை வரி அமலாக்கத்தின் போது கூடுதல் வரி செலுத்தும் நிலை ஏற்பட்டால், அது குறைந்த வருமானம் பெரும் மக்களையே பாதிக்கும். ஆகவே, அரசாங்கம் இதற்காகவே ஒரு இழப்பீட்டு நிதியுதவியை முன்னேற்பாடு செய்துள்ளது. இதில் பினவரும் சலுகைகள் அடங்கும்.

- RM300 ரொக்கம் BR1M உதவித்தொகை பெறுபவர்களுக்கு வழங்கப்படும்.
- தனிமனித வருமான வரி விகிதம் 1 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாக குறைக்கப்படும். - சுமார் 300,000 வரி செலுத்தும் நபர்கள், இனி வரி செலுத்த தேவையில்லை.
- RM4000 வீட்டு வருமானம் பெறும் குடும்பங்கள், இனி வரி செலுத்தும் தேவை இராது.
- 2014-ம் ஆண்டு BR1M உதவித்தொகை RM500 லிருந்து RM650 ஆக உயர்த்தப்பட்டு, வரும் 2015ம் ஆண்டு மேலும் அதிகரிப்பு செய்யப்படும்.
- வரிக்குட்பட்ட வருமானங்கள் RM100,000-லிருந்து RM400,000-ஆக அதிகரிக்கப்படும். நடப்பிலுள்ள அதிகபட்ச வரி விகிதம் 26 விழுக்காட்டிலிருந்து முறையே 24,24.5 மற்றும் 25 விழுக்காடாக குறைக்கப்படும்.

மலேசியாவில் நியாயமான ஒன்றாக அறிமுகப்படுத்தப் படவருக்கும் பொருள் சேவை வரி, நடப்பில் இருக்கும் மறைமுக மற்றும் திரைமைறையற்ற வரியின் அமைப்பை நாகரிகமான ஒன்றாக மாற்றுவதற்கே ஆகும். மேலும், நிதி நிலைப்பாட்டை மேம்படுத்தும்வாய்ப்பை தருகிறது. நிதி மற்றும் சுங்கத்துறை அமைச்சுகளின் ஆய்வின் படி பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வரிவிலக்கு அளிப்பதால், மலேசியாவின் பொருள் சேவை வரி முன்மாதிரி ஒரு முற்போக்ககான ஒன்றே தவிர பிறபோக்கானது அல்ல. பூஜிய மதிப்பிலான பொருட்கள் (உணவு, தண்ணீர், மின்சாரம் - ஒரு அளவுக்கு உற்பட்ட) மற்றும் நெருக்கடியான துறைகள் (பொதுபோக்குவரத்து, சுகாதாரம், கல்வி, நிலம், நிதி சேவைகளான ஆயுள் காப்பிடு) ஆகியவை இதில் அடங்கும். உண்மையாதெனில், ஏழை குடும்பங்கள் அதிகமாக செலவிடும் பொருள் மற்றும் சேவைகளுக்கு அரசாங்கம் வரி விலக்கு மற்றும் குறைந்த வரி விதிப்பு அளிக்கிறது.



பொருள் சேவை வரி (GST)

பொருள் சேவை வரி அமலாக்கம் இன்னும் நான்கு மாதங்களில் இவ்வாண்டு ஏப்ரல் 15ஆம் தொடங்கப்படவுள்ளது. இது தற்பொழுது அமலில் இருந்து வரும் விற்பனை மற்றும் சேவை வரிக்கு பதிலாக விதிக்கப்படுகிறது. கடந்த ஏப்ரல் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் GST மசோதா தாக்கல் செய்யப்பட்டது. மூன்றாவது முறை வாசிப்பிற்கு பிறகு 118 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்து 81 பேர் ஆட்சேபனை செய்தனர். 2015ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தை விளக்குகையில், பிரதமர் மற்றும் நிதி அமைச்சருமான நஜிப் துன் ரசாக் அவர்கள், பள்ளி பயிற்சி பத்தகம், மேற்கோள் புத்தகம் மற்றும் ரோன் 95 பெட்ரோலுக்கும் வரி விலக்கு என்று அறிவித்தார்.

அரசாங்கம் ஏன் GST வரியை அமலில் கொண்டு வர வேண்டும் என்ற விளக்கத்தை மக்களிடையே பரப்புவதற்கு அரசாங்க உறுப்புகள் பலவித பிரச்சாரங்கள் துல்லியமாகவும் மற்றும் வெற்றிகரமாகவும் செய்து வருகின்றன. GST துல்லியமான ஒன்று என்பதால், அதன் விளக்கம் பயனீட்டாளர்களான மக்களுக்கு அவசியம் தேவைப்படுகிறது. தாங்கள் எவ்வளவு வரி கட்டுகிறோம் என்பதை அவசியம் அவர்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும். வரியின் வழி பெறப்பட்ட இந்த லாபத்தை வணிகர்கள் அரசாங்கத்திற்கு தவறாமல் கட்டுவதால் வரி நிர்மாணிப்பு செலவுகளைக் குறைக்க முடியும். இறுதியாக அதிகளவில் பெறப்படும் லாபம் நாட்டின் முன்னேற்ற திட்டங்களுக்கு வழங்கப்படும். மேலும், உயர் வருமானம் பெரும் நாடு எனும் மலேசியாவின் இலக்கு நிறைவேறும்.

மக்களின் கருத்து



GST-யிடம் பதிவு செய்த வணிகர்கள் மட்டுமே GST வரியை விதிக்க முடியும். பெறப்பட்ட இவ்வரி அரசாங்கத்திடம் வழங்கப்பட வேண்டும். இதன் சிறப்பு என்னவென்றால், வணிகர்கள் செலுத்திய வரியை மீண்டும் அவர்கள் கோர அனுமதி அளிக்கப்படும்.



பொருள் சேவை வரி விதிக்கப்பட்ட பொருட்களை நாம் வாங்கினாலே தவிர மற்ற எதனை பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை.



GST மூலம் அதிக விலையில் விற்பனை செய்து லாபமீட்டும் வணிகர்களுக்கு எதிரே அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுப்பதை நான் மிகவும் ஆதரிக்கிறேன்.



மக்களின் சுபிட்சத்தை பேண, அரசாங்கம் வாங்கிய வரியை மீண்டும் மக்களுக்கு சுகாதாரம், கல்வி, பாதுகாப்பு மற்றும் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல் போன்ற வழிகளில் திருப்பி தரப்படுறது.



வரி செலுத்துவது நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கிறது என்பதன் அவசியத்தை புதிய தலைமுறையினர் புரிந்துக் கொள்ள வேண்டும்.



குறைந்த வருமானம் பெருவோரின் நிலையை கருத்தில் கொண்டு அரிசி, காய்கறி, சமையல் எண்ணெய் மற்றும் மீன் போன்ற அத்தியாவசியப் பொருள் சேவைகளுக்கு GST விலக்கு.

சுமையில்லா வாழ்வில் சுகமில்லை

பனி சுமந்த புற்களுக்கு களைப்பில்லை
கனி சுமந்த கிளைகளுக்கு வலியில்லை
ஓயாமல் சிமிட்டுவதால் இமைகள் தேய்வதில்லை
சுழலாமல் நிற்பதால் மரங்கள் சலிப்பதில்லை

இடி விழுந்து பூமி உடைவதில்லை
மின்னல் வெட்டி வானம் கிழிவதில்லை
சுற்றுவதால் பூமிக்கு தலை சுற்றவில்லை
துடிப்பதால் அதுபத்திற்கு சோகமில்லை
விழுவதால் மழைத்துளிக்கு காயமில்லை
அழுவதால் பிறந்த சிசுக்கு நோவுமில்லை
காயாத மலரில்லை தேயாமல் நிலவில்லை
கொய்யாத மலர்கள் மாலையாவதில்லை
நெய்யாத நூல் சேலையாவதில்லை
தோல்விகள் என்றும் நிரந்தரமில்லை
வெற்றி என்பது தூரமில்லை.

சுமைகள் சுமையல்ல ஒத்துக்கொள்
தோல்விகள் தோல்வியல்ல ஏற்றுக்கொள்
வெற்றியை தக்கவைக்க பழகிக்கொள்
உன் வாழ்க்கை உன் கையில் உணர்ந்துக்கொள்!!!

~ தாரகை ~

